ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

# நம்பெருமாள் விஜயம்

(மலர் – 6) Sep 2007



நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவன்

"ஸ்ரீ அஹோபில தாஸன்" க. ஸ்ரீதரன்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:
திருவே தஞ்சம்
திருவரங்கனே தஞ்சம்
தஞ்சமடைந்த நம் ராமானுஜன் திருவடிகளே தஞ்சம்

| |
|---|
| கைப் பொருள்கள் முன்னமே கைக் கொண்டார் காவிரி நீர்<br>செய்ப்புரள ஓடும் திருவரங்கச் செல்வனார்<br>எப்பொருட்கும் நின்று ஆர்க்கும் எய்தாது நான் மறையின்<br>சொற்பொருளாய் நின்றார் என் மெய்ப் பொருளும் கொண்டாரே. |

## அடியேன் உரை

இந்த மாதத்தின் சிறப்பு என்னவென்றால், ஸ்வாமி வேதாந்த தேசிகனின் திருநக்ஷத்ரமான புரட்டாசி திருவோணம் (23.09.2007) என்பதாகும். அந்த நன்னாளை ஒட்டி, இந்த இதழில் ஸ்வாமியைப் பற்றி, பெரியதிருமுடியடைவு என்ற நூலில் உள்ள குறிப்புகள் இடம் பெற்றுள்ளன.

ஸ்வாமியின் திருநக்ஷத்ரத்தை முன்னிட்டு, நம்பெருமாளின் திருவுள்ளத்தால், அடியேன் namperumal.wordpress.com என்ற blog ஒன்றைத் தொடங்கியுள்ளேன். அதில், ஒவ்வொரு நாளும் ஸ்வாமி தேசிகன், நம்பெருமாளின் பாதுகைகள் மீது இயற்றிய அதி அற்புதமான ஸ்ரீ பாதுகா ஸஹஸ்ரம், ஒவ்வொரு ச்லோகம் வீதம் பொருளுடன் வரும் என்பதை மகிழ்வுடன் கூற விரும்புகிறேன்.

ஸர்வம் க்ருஷ்ணார்ப்பணம் ... வாஸுதேவம் ஸர்வம்

ஸ்ரீ அஹோபில தாஸன்

க. ஸ்ரீதரன்

# உட்பொதிவு


1. ஸ்ரீ ரங்கராஜஸ்தவம்
2. ஸ்ரீபாஷ்யம்
3. ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம்
4. முமுக்ஷுப்படி
5. சிறிய திருமடல்
6. அமலனாதிபிரான்
7. ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகன்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீ ரங்கநாயகி சமேத ஸ்ரீ ரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீபராசரபட்டர் அருளிச் செய்த

# ஸ்ரீரங்கராஜஸ்தவம்
## (பகுதி – 6)

50. ஸ்ரீரங்க சந்த்ரமஸம் இந்திரயா விஹர்த்தும்
விந்யஸ்ய விச்வ சித் அசித் நயந அதிகாரம்
ய: நிர்வஹதி அநிசம் அங்குளி முத்ரயா ஏவ
ஸேநாந்யம் அந்ய விமுகா: தம் அசிச் ரியாம

பொருள் – (விஷ்வக்சேனரைத் துதிக்கிறார்) – யார் ஒருவர் ஸ்ரீரங்கநாதனை ஸ்ரீரங்கநாச்சியாருடன் இனிதாக இருக்கும்படி ஆதிசேஷன் மீது அமர்த்துகிறாரோ, யார் ஒருவர் அனைத்து சேதன அசேதனங்களை நியமிக்கவல்ல அதிகாரத்தைத் தனது விரல் முத்திரையிலேயே கொண்டு நியமிக்கிறாரோ – அப்படிப்பட்ட சேனைமுதலியாரை, மற்றொரு புகலிடம் அற்றவர்களாகச் சென்று பணிந்தோம்.

51. ஸைங்யதுரீண ப்ராண ஸஹாயாம் ஸூத்ரவதீம் ஆசிச் ரியம்
ஸ்ரீ பத லாக்ஷா லாஞ்ச்சித ஸேவா ப்ரோத லஸத்தோர் வல்லி விலாஸம்

பொருள் – (விஷ்வக்சேனரின் பிராட்டியைத் துதிக்கிறார்) – பெரியபிராட்டியான ஸ்ரீரங்கநாச்சியாரின் திருவடிகளில் இடப்பட்ட செம்பஞ்சுச்சாற்றின் அடையாளமானது, இவள் கைகளில் கைங்கர்யம் செய்பவர்களின் அடையாளமாக உள்ள திருவொற்றாடையில் உள்ளது. இப்படிப்பட்ட கைங்கர்யம் உள்ளவளும், கொடி போன்ற அழகான கைகள் உடையவளும், ஸேனை முதலியாரின் பத்தினியும் ஆகிய ஸூத்ரவதி என்ற தாயை நான் அண்டினேன்.

52. விததது ஸுகம் வஷ்வக்ஸேநஸ்ய தே ப்ரதமே படா:
கரிமுக ஜயத்ஸேநௌ காலாஹ்வ ஸிம்ஹமுகௌ ச ந:
ஜகதி பஜதாம் தத் தத் ப்ரத்யூஹதூல தவாநலா:
திசிதிசி திவாராத்ரம் ஸ்ரீரங்க பாலந கர்மடா:

பொருள் – (நான்கு முக்கிய காவலர்களைத் துதிக்கிறார்) இந்த உலகில் எம்பெருமானின் அடியார்களான நமக்கு வரக்கூடிய பலவிதமான இடையூறுகள் என்ற பஞ்சுகளுக்கு காட்டுத்தீ போன்றவர்கள், இரவு–பகல் பாராமல் அனைத்து திசைகளிலும் நின்று அரங்கனின் பெரியகோயிலைக் காப்பதிலேயே மும்முரமாக உள்ளவர்கள், சேனை முதலியாரின் ப்ரதான தளபதிகள், அவரது முக்கிய சேவகர்கள் – இப்படிப்பட்ட கஜாநநன், ஜயத்ஸேநன், ஹரிவக்த்ரன் மற்றும் காலப்ரக்ருதி ஆகிய நால்வரும் நமக்கு அனைத்து நன்மைகளையும் அளிப்பார்களாக.

53. ச்ருதிமயம் அதிஹர்ஷ ப்ரச்ரய ஸ்மேர வக்த்ரம்
மணிமுகுரம் இவ அக்ரே மங்களம் ரங்கதாம்ந:
சரணம் அபிகதா: ஸ்ம: யத்ர ரூபஸ்வரூப
ஸ்வகுண மஹிம தர்சீ மோததே ரங்கசாயீ

பொருள் – (கருடனைத் துதிக்கிறார்) – ஸ்ரீரங்கநாதன், தன்னுடைய அழகிய திருமேனி எழில், இனிமையான ஸ்வரூபம், திருக்கல்யாண குணங்கள் முதலானவை

பெரிய திருவடியான கருடனிடம் ப்ரதிபலிப்பதைக் கண்டு மகிழ்கிறான். இப்படியாக பெரியபெருமாளின் முன்பாக இரத்தினக் கற்கள் பதிக்கப்பட்ட கண்ணாடி போன்றவனும், நம்பெருமாளை எப்போதும் காண்பதால் உண்டாகும் மிகுந்த மகிழ்வால் மலர்ந்த திருமுகத்துடன் உள்ளவனும், வேதமே வடிவம் எடுத்தாற்போல் உள்ளவனும் ஆகிய கருடனை நமது அரண் போன்று நாம் பற்றியவர்களாக ஆனோம்.

54. தார்க்ஷ்ய பக்ஷ திவத் தஸ்ய வல்லபாம்
ருத்ரயா ஸஹ ஸுகீர்த்திம் அர்ச்சயே
ஹர்ஷ பாஷ்பம் அபி கீர்த்திம் அர்த்திதாம்
யங்முகேந கமலா கடாக்ஷயேத்

பொருள் – (கருடனின் பத்தினிகளைத் துதிக்கிறார்) ஸ்ரீரங்கநாச்சியார் தனது அடியார்களுக்கு ஏற்ற ஆனந்தம் மற்றும் கீர்த்தியை கருடனின் பத்தினிகள் மூலமாகவே கடாக்ஷிக்கிறாள். அப்படிப்பட்ட பெரிய திருவடியான கருடனின் நாயகியான ஸுகீர்த்தி என்பவளை, ருத்ரை என்னும் மற்றொரு நாயகியுடன் சேர்த்து வணங்குகிறேன்.

55. ஸ்வ அஸ்த்ரரூப ஸ்ப்புரத் மௌலி மா சப்த இதி
உத்துநாநாம் ஸுராந் தர்ஜநீ முத்ரயா
நாத நித்ரா உசித உந்நித்ர தாம்ர ஈக்ஷணாம்
ஸஞ்சரந்தீம் ஸ்தும: தாம் ச பஞ்சாயுதீம்

பொருள் – (நம்பெருமாளின் ஐந்து ஆயுதங்களைத் துதிக்கிறார்). இவைகள் பகவானின் அஸ்த்ரங்களாக உள்ள நிலை, இவைகள் புருஷர்களாக மாறி உலவிய போதிலும், அந்தப் புருஷர்களின் முடிகள் மூலம் உணரும்படி உள்ளது. ஸ்ரீரங்கநாதனை கூட்டமாக வணங்க வந்துள்ள தேவதைகளை, தங்கள் ஆள்காட்டி விரல் கொண்டு, சப்தம் செய்யாமல் இருக்கும்படி கட்டளையிடுகின்றன. இதனைக் கண்டு அந்தத் தேவதைகள் நடுங்கியபடி உள்ளன. ஸ்ரீரங்கநாதன் இடையூறு இன்றி உறங்கும் பொருட்டு இவைகள் எப்போதும் உறங்காமல் உள்ளதால், இவைகளின் கண்கள் சிவந்துள்ளன. இப்படியாக அங்கு உலவியபடி உள்ள ஐந்து ஆயுதங்களை (சக்கரம், சங்கு, வில், வாள், கதை) நாம் துதிப்போம்.

56. அஸ்த்ரக்ராம அக்ரேஸரம் நாத வீக்ஷா
சீது க்ஷீப உத்வேல ந் ருத்த அபிராமம்
சக்ரம் தைத்யச்சேத கல்மாஷித அங்கம்
ப்ராம்யத் ஜ்வாலா மாலபாரி ப்ரபத்யே

பொருள் – (சக்ரத்தாழ்வானைத் துதிக்கிறார்) பெரியபெருமாளின் கடைக்கண் பார்வை என்னும் அமிர்தத்தை எப்போதும் பருகியபடி உள்ளதால் மதம் கொண்டபடி உள்ளான், அந்த மயக்கம் காரணமாக நர்த்தனம் செய்தபடி உள்ளான், அசுரர்களை எப்போதும் அழித்தபடி உள்ளதால், இரத்தக்கறை கொண்ட திருமேனி உடையவனாக உள்ளான், கொழுந்து விட்டு எரியும் ஜ்வாலைகளால் சூழப்பட்டுள்ளான், எம்பெருமானின் ஆயுதங்களில் தலைமை பெற்றுள்ளான் – இப்படிப்பட்ட சக்ரதாழ்வானை நான் சரணம் புகுகிறேன்.

57. ஹனுபூஷ விபீஷணயோ: ஸ்யாம் யதமௌ இஹ மோக்ஷம் உபேக்ஷ்ய
ரகுநாயக நிஷ்க்ரய பூதம் புவி ரங்கதநம் ரமயதே

பொருள் – (அனுமானையும் விபீஷணனையும் கூறுகிறார்) திருவரங்கத்தின் செல்வமாக உள்ள நம்பெருமாளை, தங்களது கைங்கர்யம் மூலம் மகிழ்விக்கின்றனர். மோக்ஷம் என்பதையும் வெறுத்து, இந்த உலகில் எப்போதும் இருந்தபடி, அவனது கைங்கர்யத்தில் ஈடுபட்டபடி உள்ளனர். இப்படிப்பட்ட அனுமானுக்கும் விபீஷணனுக்கும் நான் ஆட்படுவேனாக.

58. இத: பஹி: பஞ்ச பராஞ்சி காநி
ப்ரத்யஞ்சி தாநி ஸ்யு: இத: அந்த: இத்த்தம்
ஔபாதிகேப்ய: நிருபாதி போக்யே
ப்ரத்யாஹரத் வேத்ரவரம் வ்ரஜாமி

பொருள் – (பெரியபெருமாளின் முன்பாக குறுக்கே உள்ள பெரிய பிரம்பைக் கூறுகிறார்) இந்த இடத்திற்கு (மூலஸ்தானம்) அப்பால் சென்ற பின்னர், ஐந்து இந்த்ரியங்களும் உலக விஷயங்களின் பின்னே செல்வதாகக் கடவது, இந்த இடத்தில் நிற்கும்வரை, ஐந்து இந்த்ரியங்களும் மிகவும் உயர்ந்தவனான ஸ்ரீரங்கநாதனை மட்டுமே பற்றக் கடவது – இப்படியாக ஆணை இடுவது எது? பெரியபெருமாளின் முன்பாக உள்ள திருப்பிரம்பு ஆகும். அந்தப் பிரம்பு, நமது இந்த்ரியங்களை உலக விஷயங்களிலிருந்து மீட்டு, நாம் அடையவேண்டிய இடமான ஸ்ரீரங்கநாதனிடம் சேர்த்துவிடுகிறது.

விளக்கம் – இந்தப் பிரம்பானது, பெரியபெருமாளின் முன்பு காவலாக உள்ளது. யார் வந்தாலும், அவர்களது இந்த்ரியங்களின் – உலக விஷயங்களை நாடும் தன்மை – என்ற நிலையை, வெளியிலேயே தடுத்து நிறுத்துகிறது. பகவானைப் பற்றுகிற நிலை கொண்ட இந்த்ரியங்கள் மட்டுமே உள்ளே அனுமதிக்கப்படுகின்றன.

59. சேஷசய லோசந அம்ருதநதீ ரய ஆகுலித லோலமாநாநாம்
ஆலம்பம் இவ ஆமோத ஸ்தம்ப த்வயம் அந்தரங்கம் அபியாம:

பொருள் – (மூலஸ்தானத்தில் இரு பக்கமும் உள்ள தூண்களைப் போற்றுகிறார்) அழகான ஆதிசேஷன் மீது ஸ்ரீரங்கநாதன் சயனித்துள்ளான். அங்கு அவனது கடாக்ஷம் என்னும் அமிர்த ஆறு ஓடியபடி உள்ளது. அந்த ஆற்றின் வேகத்தால், அங்கு நிற்பவர்கள் தள்ளப்பட்டு, தத்தளித்தபடி இருக்கக்கூடும். அப்படிப்பட்டவர்கள் நிலைதடுமாறாமல் நிற்பதற்கு, இரண்டு திருமணத் தூண்கள் பற்றுக்கோலாக உள்ளன. அவற்றை நாம் அடைவோமாக.

60. ஸ்ரீரங்க அந்தர் மந்திரம் தீப்ர சேஷம்
ஸ்ரீபூமீ தத் ரம்யஜாமாத்ரு கர்ப்பம்
பச்யேம ஸ்ரீதிவ்ய மாணிக்ய பூஷா
மஞ்ஜூஷாயா: துல்யம் உந்மீலிதாயா:

பொருள் – (மூலஸ்தானத்தைப் போற்றுகிறார்) அழகான ஆதிசேஷன் உள்ளதும், ஸ்ரீதேவி–பூதேவி–நம்பெருமாள் என்னும் இவர்களைத் தன்னுள் கொண்டதும், ஸ்ரீரங்கநாச்சியாரின் திறந்து வைக்கப்பட்டுள்ள திருவாபரணப் பெட்டி போன்றதும் ஆகிய ஸ்ரீரங்கத்தின் கர்ப்ப க்ருஹத்தை நாம் வணங்குவோம்.

ஸ்ரீபராசரபட்டர் திருவடிகளே சரணம்

.. .. தொடரும்

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ஸ்ரீபாஷ்யம்

(பகுதி – 6)

## இரண்டாம் பாதம் – உபயலிங்கபாதம்

உலக விஷயங்களில் நாட்டம் கொண்டுள்ள ஜீவனுக்கு, பரமாத்மா மீது ஈடுபாடு ஏற்படவேண்டும். அதன் பொருட்டு, பரமாத்மாவானவன் – குற்றம் குறை அற்றவன், அளவற்ற திருக்கல்யாண குணங்கள் கொண்டவன், தாழ்வுகள் அற்றவன் என்று கூற உள்ளார்.

### அதிகரணம் – 1 – ஸந்த்யாதிகரணம்

இந்த அதிகரணத்தில், ஜீவன் தனது கனவில் காணும் பொருள்கள் அனைத்தும் பரமாத்மாவால் படைக்கப்படுகின்றன என்பது நிருபிக்கப்பட உள்ளது.

3–2–1 ஸந்த்யே ஸ்ருஷ்டி: ஆஹ ஹி

பொருள் – ஸ்வப்ன நிலையில் (கனவில்) ஜீவன் உள்ளபோது உண்டாகும் பொருள்களின் உற்பத்தி ஜீவனாலேயே நிகழ்கிறது. இப்படி அல்லவோ ஸ்ருதிகள் கூறுகின்றன?

பாஷ்யம் – ஸம்ஸாரத்தில் உள்ள ஜீவன் தனது கர்மம் காரணமாக பிறப்பு, இறப்பு, சுகம், துக்கம் போன்றவற்றைத் தொடர்ந்து அனுபவித்தபடி உள்ளான். அந்த ஜீவன் விழித்திருக்கும்போது (ஜாக்ரத் நிலை) இது பொருந்தும். இனி அவன் உறங்கும்போது ஏற்படும் கனவு நிலை போன்றவற்றில், அவன் விழிப்பு நிலை போன்றே துன்பத்தில் சிக்கியபடி உள்ளான் என்று ஆராயப்பட உள்ளது. கனவு நிலையில் உள்ளதைப் பற்றி ப்ருஹத் உபனிஷத் (4–3–10) – ந தத்ர ரதா ந ரதயோகா ந பந்தாநோ பவந்தி: அத ரதாந் ரதயோகாந் பத: ஸ்ருஜதே, ந தத்ர ஆனந்தா முத: ப்ரமுத: பவந்தி அத ஆனந்தாந் முத: ப்ரமுத: ஸ்ருஜதே ந தத்ர வேசாந்தா: புஷ்கரிண்ய: ஸ்ரவந்த்ய: பவந்தி அத வேசாந்தா: புஷ்கரிண்ய: ஸ்ரவந்த்ய: ஸ்ருஜதே ஸ ஹி கர்த்தா – (அந்தக் கனவு நிலையில்) தேர்கள், அவற்றில் பூட்டப்பட்ட குதிரைகள், அவை செல்லும் பாதைகள் ஏதும் இல்லை, ஆயினும் தேர், குதிரைகள், பாதைகள் ஆகியவற்றைப் படைக்கிறான், அந்த நிலையில் ஆனந்தம், இன்பம், பேரானந்தம் இருப்பதில்லை, இவற்றையும் அவன் படைக்கிறான், அந்த நிலையில் குட்டைகள், குளங்கள், நதிகள் இல்லை, இப்படிப்பட்ட குளங்கள், குட்டைகள், நதிகள் ஆகியவற்றைப் படைக்கிறான், இதன் காரணம், அவன் ஸ்ருஷ்டி (படைப்பவன்) செய்பவன் அல்லவா – என்று கூறியது.

சந்தேகம் – இந்த வரியில் உள்ள கர்த்தா (ஸ்ருஷ்டி செய்பவன்) என்பவன் யார்? யார் தேர் போன்றவற்றைப் படைப்பவன்? இவை அந்தக் கனவுநிலையில் உள்ள ஜீவனால் படைக்கப்படுகிறதா அல்லது ஸர்வேஸ்வரன் படைக்கிறானா?

பூர்வபக்ஷம் – கனவில் காணப்படும் இவைகளை ஜீவனே படைக்கிறான். எப்படி? ஸந்த்யம் என்ற பதம் கனவில் உள்ள இடம் என்ற பொருள் தருவதாகும். ஸ்ருதியில் – ஸந்த்யம் த்ரிதீயம் ஸ்வப்ந ஸ்தானம் – மூன்றாவதாக உள்ள கனவு இடம் என்பதே ஸந்த்யம் – என்று கூறப்பட்டது. அந்த நேரத்தில் (கனவின்போது) செய்யப்படும் ஸ்ருஷ்டிகள் அனைத்தும், ஜீவனால் செய்யப்படுகிறது. இதனையே மேலே உள்ள ஸ்ருதி – ஸ ஹி கர்த்தா – அவனே செய்கிறான் – என்றது. எனவே, கனவில் உள்ள பொருள்கள் அனைத்தும் ஜீவனால் படைக்கப்படுகின்றன என்றே கொள்ளவேண்டும்.

### 3–2–2 நிர்மாதாரம் ச ஏகே புத்ராதய: ச

பொருள் – வேறு சாகையைச் (வேதத்தின் பிரிவு) சேர்ந்தவர்கள் ஜீவனைப் படைப்பவன் என்றே ஓதுகின்றனர். புத்ரன் போன்றவர்கள் விரும்பப்படும் பொருள்களாகவே கூறப்படுகின்றனர்.

பாஷ்யம் – (கடந்த சூத்திரத்தின் பூர்வபக்ஷம் தொடர்கிறது) ஜீவன் தனது கனவில் காணும் பொருள்களை அவனே படைப்பதாக வேறு சாகையைச் சாந்தவர்கள் கூறுகின்றனர். கட உபனிஷத் (5–8) – ய ஏஷு ஸுப்தேஷு ஜாகர்த்தி காமம் காமம் புருஷோ நிர்மிமாண: – இந்த்ரியங்கள் உறங்கிக் கொண்டுள்ளபோது, எந்த ஒரு ஜீவன் விழித்துக் கொண்டு, தான் விரும்பியவற்றைப் படைக்கிறானோ – என்று கூறியது. இங்கு உள்ள காமம் என்ற பதம் மூலம் விரும்பப்படும் பொருள்கள் கூறப்படவில்லை, மாறாக புத்திரன் போன்றவர்கள் கூறப்பட்டனர் (புத்திரன் போன்றவர்களை ஜீவன் படைப்பது போன்று கனவில் உள்ல பொருள்களையும் ஜீவனே படைக்கிறான் என்று கொள்ளவேண்டும்). இவ்விதம் எவ்வாறு கூற இயலும்? காமம் என்ற பதம் மூலம் புத்திரர்களே கூறப்பட்டனர் என்பதை உணர்த்தும் உபனிஷத் வரிகள் உள்ளன. இவையாவன:

- கட உபனிஷத் (1–5) – ஸர்வான் காமாந் சந்தத: ப்ரார்த்தயஸ்வ – விரும்பப்படும் பொருள் அனைத்தும் விரும்பியபடி வர வேண்டிக் கொள்வாயாக.

- கட உபனிஷத் (1–23) – சதாயுஷ: புத்ரபௌத்ரான் வ்ருணீஷ்வ: – நூறு ஆண்டுகள் வாழும் புத்திரன், பௌத்திரனை வேண்டிக் கொள்வாயாக.

ஆக, புத்திரன் போன்றவர்களை ஜீவன் படைப்பது போன்று, கனவில் உள்ளவற்றையும் ஜீவனே படைக்கிறான் என்றே கொள்ளவேண்டும். இவனுக்கு அத்தகைய திறன் உள்ளதா என்றால், ப்ரஜாபதியின் வாக்குகளைக் காணும்போது ஜீவனது விருப்பங்கள் நிறைவேறும் (ஸத்ய ஸங்கல்பம்) என்றே கொள்ளவேண்டும். ஆகவே உபாயங்கள் ஏதும் இல்லாத போதும், ஜீவனால் கனவில் படைக்க இயலும்.

### 3–2–3 மாயாமாத்ரம் து கார்த்யேந அநபிவ்யக்த ஸ்வரூபத்வாத்

பொருள் – வியப்பு அளிக்கவல்ல கனவுப் பொருள்கள் அனைத்தும் பரமாத்மாவால் படைக்கப்பட்டதே தவிர, ஜீவனால் அல்ல, இவன் ஞானம் பெறாதவன் ஆகையால்.

ஸித்தாந்தம் – (கடந்த இரு சூத்திரங்களில் உள்ள பூர்வபக்ஷத்திற்கான ஸித்தாந்தம்) – சூத்திரத்தில் உள்ள து என்ற பதம் பூர்வபக்ஷ வாதங்களை மறுக்கிறது. கனவில் காணும் பொருள்கள், தேர்கள், குளங்கள் ஆகியவை ஆச்சர்யம் அளிக்கக் கூடியவை, பரமபுருஷனால் படைக்கப்பட்டவை ஆகும். மாயா என்ற பதம் மித்யை (பொய்) என்ற பொருளில் வரவில்லை, ஆச்சர்யம் என்ற பொருளில் வந்தது. இதனை வால்மீகி இராமாயணம் பாலகாண்டம் (2–27) – ஜநகஸ்ய குலேஜாதா தேவ மாயேவ நிர்மிதா – ஜனகனின் குலத்தில், தேவ மாயையே வடிவம் எடுத்தாற்போன்று சீதை உதித்தாள் – என்பதன் மூலம் (இதில் உள்ள மாயா என்ற பதம்) உணரலாம். (ஆனால் ஸ்ருதியில் – ந பவந்தி – இல்லை – என்று கூறப்பட்டதே. இதன் மூலம் மாயை என்ற பதம், பொய் என்ற பொருளில் வந்ததாக ஏன் கொள்ளக்கூடாது? இதற்கு விடை தருகிறார்) கனவில் உள்ள தேர், குதிரைகள், மார்க்கங்கள் போன்றவை, கனவில் அவற்றைக் காண்கின்ற மனிதனைத் தவிர மற்ற யாரலும் அனுபவிக்க இயலாது (என்பதை உணர்த்தவே ஸ்ருதியில் – ந பவந்தி – என்று கூறப்பட்டது). கனவில் காணப்படும் தேர் போன்றவற்றை, பரமபுருஷன் படைக்கிறான், இவை சிறிது நேரம் மட்டுமே இருக்கும்படியும், அவற்றைக் காணும் மனிதனுக்கு மட்டுமே புலப்படும்படியாகவும் படைக்கிறான் – இதனையே ஸ்ருதியானது, ஆச்சர்யம் என்று கூறியது. இப்படியாக வியப்பு அளிக்க வைக்கும் படைப்பு என்பது, பரமபுருஷனால் மட்டுமே இயலும். இதன் காரணம், ஸத்ய ஸங்கல்பம் என்பது பரமபுருஷனுக்கு மட்டுமே ஸித்திக்கிறது, ஜீவனுக்கு அல்ல. ஜீவாத்மா, ஸத்யஸங்கல்பம் உடையவனாக இருந்தபோதிலும், ஸம்ஸாரத்தில் உள்ளதால், அந்தத் தன்மையை முழுமையாக

அறிய இயலாதவனாகவே உள்ளான். எனவே, இவற்றைப் படைத்தல் என்பது ஜீவனுக்கு ஏற்படாது.

கட உபனிஷத்தில் (5–8) – காமம் காமம் புருஷோ நிர்மிமாண: – விரும்பும் பொருள்கள் அனைத்தையும் புருஷன் படைக்கிறான் – என்று பரமபுருஷனே படைப்பவனாகக் கூறப்பட்டான். இவ்விதமாக பரமபுருஷனின் உயர்த்தியைக் கூறி, நிறைவு செய்யும்போது (கட உபனிஷத் 5–8) – ய ஏஷு ஸுப்தேஷு ஜாகர்த்தி – இவை உறங்கும்போது அவன் விழித்துள்ளான் – என்று கூறியது. இதே வரியில் – தத் ஏவ சுக்ரம் தத் ப்ரஹ்ம தத் ஏவ அம்ருதம் உச்யதே, தஸ்மிந் லோகா ஸ்ரீதா: ஸர்வே தது நாத்யேதி கச்சந – அப்படிப்பட்ட அவனே ஒளியென்றும், ப்ரஹ்மம் என்றும், அமிர்தம் என்றும் கூறப்படுகிறான், அவனிடமே அனைத்து உலகங்களும் ஒடுங்கி உள்ளன, அவனைக் கடந்து ஏதும் இல்லை – என்று கூறப்பட்டது. இந்தப் பொருள் வெளிப்படும் விதமாகவே, ப்ருஹத் உபனிஷத் (4–3–10) – அத வேசாந்தா: புஷ்கரிண்ய: ஸ்ரவந்த்ய: ஸ்ருஜதே ஸ ஹி கர்த்தா – குட்டைகள், குளங்கள், நதிகள் ஆகியவற்றை அந்தப் புருஷனே படைக்கிறான், காரணம் அவன் அன்றோ ஸ்ருஷ்டி செய்பவன் – என்று பரமபுருஷனைக் குறித்துக் கூறியது.

### 3–2–4 பராபித்யாநாத் து திரோஹிதம் ததோ ஹி அஸ்ய பந்தவிபர்யயௌ

பொருள் – பரமபுருஷனின் ஸங்கல்பம் காரணமாகவே ஜீவனின் ஸ்வரூபம் மறைக்கப்படுகிறது, அந்த ஸங்கல்பம் காரணமாகவே, ஜீவனுக்கு ஸம்ஸாரபந்தம் உண்டாகிறது.

பூர்வபக்ஷம் – கடந்த சூத்திரத்தில் நீங்கள் (ஸித்தாந்தவாதி) கூறுவது – ஜீவனும் ஸத்யஸங்கல்பனே – என்பதாகும். அப்படி என்றால் அவனது பாவங்கள் அனைத்தையும் நீக்கவல்ல அந்தக் குணங்கள், ஏன் அன்றாட ஸம்ஸார வாழ்வில் வெளிப்படுவதில்லை?

ஸித்தாந்தம் – சூத்திரத்தில் உள்ள – து – என்ற பதம் இந்த பூர்வபக்ஷத்தைத் தள்ளுகிறது. பரமபுருஷனின் ஸங்கல்பம் (பரா பித்யாநாத்) காரணமாகவே, ஜீவனுக்கு அவனுடைய (ஜீவனுடைய) உண்மையான ஸ்வரூபம் மறைக்கப்படுகிறது. எண்ணற்ற கர்மபலன் காரணமாகத் தொடர்ந்து வரும் பிறவிகளில், தவறுகள் செய்தபடி உள்ள ஜீவனின் ஸ்வரூபம் பரமாத்மாவால் மறைக்கப்பட்டு விடுகிறது. ஜீவன் ஸம்ஸாரத்தில் சிக்குவதும், அதிலிருந்து மீண்டு மோக்ஷம் புகுவதும் பரமாத்மாவின் ஸங்கல்பத்தால் மட்டுமே என்பதே இந்தச் சூத்திரத்தின் கருத்தாகும். இதனைக் கீழே உள்ள பல ஸ்ருதி வரிகள் மூலம் அறியலாம்:

- தைத்ரீய உபனிஷத் (2–7–1) – யதா ஹ்யேவைஷ ஏதஸ்மிந் அத்ருச்யே அநாத்ம்யே அநிருக்தே அநிலயநே அபயம் ப்ரதிஷ்டாம் விந்ததே, அத ஸ: அபயம் கத: பவதி, யதா ஹ்யேவைஷ ஏதஸ்மிந் உதரம் அந்தரம் குருதே அத தஸ்ய பயம் பவதி – கண் போன்ற இந்திரியங்களால் காண இயலாதவன், கர்மம் மூலம் உண்டாகும் சரீரம் அற்றவன், தேவர்கள் என்ற பதம் மூலம் கூறப்பட இயலாதவன், எந்தவிதமான ஆதாரமும் தனக்கு தேவை அற்றவன் – இப்படிப்பட்ட பரமாத்மாவிடம், தனக்கு பயம் இன்மை ஏற்பட பக்தி பூண்டிருக்கும் ஜீவன், ஸம்ஸாரபயம் நீங்கப் பெறுகிறான், இத்தகைய பக்தியிலிருந்து சிறிது வெளியேறினாலும் அவனைப் பயம் (ஸம்ஸார) தொற்றிக் கொள்கிறது.

- தைத்திரீய உபனிஷத் (2–7–1) – ஏஷ ஹி ஏவ ஆனந்தயாதி – பரமாத்மாவே ஜீவனை ஆனந்தம் அடையும்படிச் செய்கிறான்.

- தைத்திரீய உபனிஷத் (2–8–1) – பீஷாஸ்மாத்வாத: பவதே – இவனிடம் உள்ள பயம் காரணமாகவே காற்று வீசுகிறது.

### 3–2–5 தேஹ யோகாத்வா ஸ: அபி

பொருள் – ஜீவனின் ஸ்வரூப மறைவு என்பது ஸ்ருஷ்டியின் போது ஏற்படும் உடல் சேர்க்கை மூலம் உண்டாகிறது.

பாஷ்யம் – (கடந்த சூத்திரத்தின் ஸித்தாந்தம் தொடர்கிறது) – ஜீவனின் உண்மையான ஸ்வரூபம் என்பது அவனுக்கு உடல் தொடர்பு ஏற்பட்டவுடன் மறைந்துவிடுகிறது, அல்லது சூட்சமம் நிறைந்த ப்ரக்ருதியின் தொடர்பால் மறைந்துவிடுகிறது. இதன் கருத்து என்ன? ஸ்ருஷ்டி காலத்தின்போது, உடல் போன்ற அசித் பொருள்களின் தொடர்பு ஏற்படுவதால் ஸ்வரூபம் மறைக்கப்படுகிறது. ப்ரளய காலத்தில் நாம–ரூபம் அற்ற சூட்சம ப்ரக்ருதி தொடர்பு காரணமாக, ஜீவனின் ஸ்வரூபம் மறைக்கப்படுகிறது. ஆக, ஸ்ருஷ்டி–ப்ரளய காலங்களில் கூட தனது ஸ்வரூபம் புலப்படாத நிலையில் உள்ள ஜீவன், ஸ்வப்ன நிலையில் தேர் முதலானவற்றைப் படைப்பவன் அல்லன் (அதற்கான திறமை உடையவன் அல்லன்). கட உபனிஷத் (5–8) – தஸ்மிந் லோகா: ஸ்ரிதா: ஸர்வே தது நாத்யேதி கச்சந – அனைத்தும் உறங்கும்போது இவன் விழித்திருக்கிறான், அனைத்தும் இவனை அண்டியே உள்ளன – என்று கூறுவது, பரம்பொருளுக்கு மட்டுமே பொருந்தும். ஆகவே ஜீவன் கனவின்போது அனுபவிக்க ஏற்ற பொருள்களை பரமபுருஷனே படைக்கிறான் என்றே கொள்ளவேண்டும். இதன் அவசியம் என்ன? ஜீவனின் சிற்சில கர்மங்கள் அற்பமான பலன்களை, அற்பகாலத்தில் மட்டுமே அனுபவிக்கும் நிலையை ஏற்படுத்துகின்றன. இதன் பொருட்டு கனவில், அந்த ஜீவன் மட்டுமே அனுபவிக்கக்கூடிய அவை ஸ்ருஷ்டிக்கப்படுகின்றன என்று கருத்து.

### 3–2–6 ஸூசகச்ச ஹி ச்ருதே: ஆசக்ஷதே ச தத்வித:

பொருள் – கனவுகள் நற்பலன், தீயபலன் ஆகியவற்றை உணர்த்துகிறது என்று ஸ்ருதிகள் கூறுகின்றன, கனவுகள் பற்றி அறிந்தவர்களும் இப்படியே கூறுகின்றனர்.

பாஷ்யம் – கனவில் உள்ள பொருள்கள் ஜீவனால், அவன் விருப்பத்திற்கு ஏற்ப படைக்கப்படுவதில்லை. ஏன் என்றால், கனவுகள் என்பது எதிர்காலத்தில் ஏற்பட உள்ள நன்மை–தீமைகளின் அறிகுறியே என்று ச்ருதிகள் கூறுகின்றன. இதனை சாந்தோக்ய உபனிஷத் (5–2–8) – யதா கர்மஸு காம்யேஷு ஸ்த்ரியம் ஸ்வப்நேஷு பச்யதி ஸம்ருத்திம் தத்ர ஜாநீயாத் தஸ்மிந் ஸ்வப்ந நிதர்சநே – விருப்பத்தின் அடிப்படையில் ஒருவன் ஏதோ ஒரு கர்மம் செய்தபோது, தனது கனவில் ஒரு பெண்ணைக் கண்டால், அந்தக் கர்மம் இனிதாக முடிவடைந்து, அவன் விருப்பமும் நிறைவேறும் – என்று கூறியது.

மேலும் கனவு என்பது எதிர்காலத்தில் ஏற்படவிருக்கும் நன்மை–தீமைகளை அறிவிப்பது என்று கனவு பற்றி அறிந்தவர்கள் கூறுகின்றனர், இப்படி உள்ளபோது ஒருவனின் விருப்பத்திற்கு ஏற்றபடி கனவு அமைவது என்பது பொருந்தாது. அப்படியே ஒருவன் கனவைத் தனது விருப்பத்தின்படி படைக்கிறான் என்று வைத்துக் கொள்வோம் – தீயவற்றை யாரும் விரும்புவதில்லை, ஆகவே அவன் நன்மையை அளிக்கும் கனவுகளை மட்டும் காண முயல்வான் அல்லவா? ஆகவே கனவு என்பது ஸர்வேஸ்வரனின் நியமனம் என்றே கூறவேண்டும்.

## அதிகரணம் – 2 – ததபாவாதிகரணம்

ஜீவன் உறங்கும் இடங்களாக உள்ளவை எவை என்று கூறி, நிருபிக்கப்பட உள்ளன.

### 3–2–7 – தத பாவ: நாடீஷு தத் ஸ்ருதே: ஆத்மநி

பொருள் – கனவுகள் அற்ற ஆழ்ந்த உறக்க நிலை (ஸுஷுப்தி நிலை) என்பது நாடிகள், புரீதத் மற்றும் பரமாத்மா ஆகியவற்றில் ஏற்படுகிறது. இவ்விதமே ஸ்ருதிகள் கூறுகின்றன.

பாஷ்யம் – கடந்த அதிகரணத்தில் கனவு பற்றி ஆராய்ந்த பின்னர், இந்த அதிகரணத்தில் கனவுகள் அற்ற ஆழ்ந்த உறக்க நிலை (இது ஸுஷுப்தி நிலை எனப்படும்) ஆராயப்படுகிறது. சாந்தோக்ய உபனிஷத் (8–6–3) – அத யத்ர ஏதத் ஸுப்த: ஸமஸ்த: ஸம்ப்ரஸந்ந: ஸ்வப்நம் ந விஜாநாதி ஆஸு ததா நாடீஷு ஸ்ருப்தோ பவதி – எப்போது அனைத்து இந்த்ரியங்களும் அடங்கப்பெற்றவனாக, கனவுகள் இல்லாத உறக்க நிலையில் ஜீவன் உள்ளானோ, அப்போது அவன் வெளிவிஷயங்களால் கவரப்படாமல், நாடிகளில் நுழைகிறான்– என்றது. இது போன்று ப்ருஹத் உபனிஷத் (2–1–19) – அத யதா ஸுஷுப்தோ பவதி யதா ந கஸ்யசந வேத ஹிதா நாம நாட்யோ த்வாஸப்ததி ஸஹஸ்ராணி ஹ்ருதயாத் புரீததம் அபி ப்ரதிஷ்டந்தே தாபி: ப்ரத்யவஸ்ருப்ய புரீததி சேதே – வேறு எதனையும் உணராமல் ஆழ்ந்து உறங்கும்போது, ஹிதா நாடிகள் என்று கூறப்படும் 72–ஆயிரம் நாடிகள் இதயத்திலிருந்து புறப்பட்டு, புரீதத் என்பதை அடைகின்றன, இந்த ஜீவன் (உறங்கும் ஜீவன்), அவைகளால் சூழப்பட்டு, புரீதத் என்ற இடத்தில் உறங்குகின்றான் – என்று கூறியது. மேலும் சாந்தோக்ய உபனிஷத் (6–8–1) – யத்ர ஏதத் புருஷ: ஸ்வபிதி நாம ஸதா ஸோம்ய ததா ஸம்பந்நோ பவதி – ஆழ்ந்த உறக்கத்தின்போது அந்த ஜீவன், பரமாத்மாவுடன் சேர்ந்துள்ளான் – என்று கூறியது. ஆக, ஜீவன் உறங்கும் இடமாக நாடிகள், புரீதத் மற்றும் ப்ரஹ்மம் ஆகிய மூன்றும் கூறப்பட்டது.

சந்தேகம் – இவை மூன்றில் ஏதேனும் ஒன்றில் உறங்குகிறானா அல்லது அனைத்திலும் உறங்கியபடி உள்ளானா?

பூர்வபக்ஷம் – இந்த மூன்று இடங்களும் தனித்தனியாக உள்ள இடங்களாகும். ஒரே நேரத்தில், ஒரு ஜீவன் மூன்று இடங்களிலும் உறங்குவது என்பது பொருந்தாது. ஆகவே இந்த மூன்று இடங்களில் ஏதோ ஓர் இடத்தில் மட்டுமே ஜீவன் உறங்குகிறான் என்றே கொள்ளவேண்டும்.

ஸித்தாந்தம் – இது தவறான வாதமாகும். கனவுகள் அற்ற ஆழ்ந்த உறக்கம் என்பது நாடிகள், புரீதத் மற்றும் பரமாத்மா ஆகிய முன்று இடங்களிலும் ஒரே நேரத்தில் நிகழ்கிறது. இப்படியே ஸ்ருதிகள் கூறுகின்றன. ஒரு செயலைச் செய்ய மூன்று வழிகளிலும் இடம் உள்ளது என்று கூறும்போது, அவற்றில் இரண்டை மட்டும் நீக்கிவிடுதல் என்பது பொருந்தாது. உதாரணமாக, வீட்டின் மாடியில் உள்ள கட்டிலில் மெத்தை மீது ஒருவன் உறங்குகிறான் என்றால், அவன் மூன்றிலும் (மாடி, கட்டில், மெத்தை) உறங்குவதாகக் கூறலாம் அல்லவா? இங்கு நாடி என்பதை மாடி என்றும், புரீதத் என்பதைக் கட்டில் என்றும், பரமாத்மாவை மெத்தை என்றும் கொள்ளலாம். ஆக படுக்கை போன்றுள்ள பரமாத்மாவிடம் ஜீவன் உறங்குகிறான் என்று கொள்ளலாம்.

3–2–8 அத: ப்ரபோத: அஸ்மாத்

பொருள் – ப்ரஹ்மத்திடம் சென்று உறங்குவதால், ப்ரஹ்மத்திடமிருந்தே விழித்து எழுதல் பொருந்துகிறது.

பாஷ்யம் – ஜீவன் உறங்கும் இடமாக பரமாத்மாவே நேரடியாக உள்ளதால், அந்தப் பரமாத்மாவிடமிருந்தே ஜீவன் விழித்து எழுதல் என்று ஸ்ருதி கூறுவது பொருந்துகிறது. இதனை சாந்தோக்ய உபனிஷத் (6–10–2) – ஸத ஆகம்ய ந விது: ஸத ஆகச்சாமஹே – ப்ரஹ்மத்திடம் உறங்கிவிட்டு வந்தபோதிலும், தாங்கள் அவ்விதம் செய்ததை ஜீவன் அறிவதில்லை – என்று கூறியது.

## அதிகரணம் – 3 – கர்மானுஸ்ம்ருதி சப்த வித்யதிகரணம்

உறங்கிய ஜீவனே மீண்டும் விழித்து எழுகிறான், அவன் வேறு ஜீவன் அல்லன் என்று நிரூபிக்கப்பட உள்ளது.

3–2–9 – ஸ ஏவ து கர்மானுஸ்ம்ருதி சப்த விதிப்ய:

பொருள் – கர்மம், ஞாபகம், வேதவரி, விதிகள் ஆகிய நான்கு காரணங்களாலும், விழித்து எழும் ஜீவன், உறங்கச் சென்ற ஜீவனே ஆவான்.

சந்தேகம் – ஆழ்ந்த உறக்கத்திற்குப் பின்னர் விழித்து எழுபவன் அதே ஜீவனா (உறங்கிய ஜீவன்) அல்லது வேறு ஒரு ஜீவனா?

பூர்வபக்ஷம் – வேறு ஒரு ஜீவனே எழுகிறான் என்றே கூற வேண்டும். எப்படி? விழித்து எழும் ஜீவனுக்குப் பழைய உடலின் தொடர்பு மற்றும் இந்த்ரியங்களின் தொடர்பு இல்லாமல் உள்ளதால் ஆகும். அவன் ஆழ்ந்த உறக்க நிலையில், தனது கர்மம் காரணமாக ஏற்பட்ட உடலை விட்ட நிலையில், முக்தி பெற்ற ஜீவனாகவே ஆகிறான் (இவனுக்கும் முக்தனுக்கும் வேறுபாடு இல்லை என்றாகிறது). தனது குறைபாடுகள் அனைத்தும் நீங்கப்பெற்று, ப்ரஹ்மத்தின் தொடர்பு கிட்டப்பெறுகிறான்.

ஸித்தாந்தம் – சூத்திரத்தில் உள்ள – து – என்ற பதம், இந்தப் பூர்வபக்ஷத்தைத் தள்ளுகிறது. உறங்கிய ஜீவனே மீண்டும் விழித்து எழுகிறான் என்றே கொள்ளவேண்டும், ஏன்? கர்மம், ஞாபகம், வேதவரிகள் மற்றும் வேதவிதிகள் ஆகியவை காரணமாக ஆகும். கர்மம் என்பது முன்பு (உறங்குவதற்கு முன்பு) செய்த புண்ணிய–பாவங்கள் ஆகும். உண்மையான ஞானம் ஏற்படும்வரை, இத்தகைய கர்மங்களின் பலன்களை அனுபவித்தே ஆகவேண்டும். ஞாபகம் (அனுஸ்ம்ருதி) என்பது – உறங்கச் சென்ற நான் மீண்டும் இப்போது விழித்துக் கொண்டேன் – என்ற சிந்தனையாகும். வேதவரிகளில், உறங்கச்சென்று ஜீவனே மீண்டும் எழுவதாகக் கூறப்பட்டுள்ளன. உதாரணமாக, சாந்தோக்ய உபநிஷத் (6–10–2) – த இஹ வ்யாக்ரோ வா ஸிம்ஹோ வா வ்ருகோ வா வராஹோ வா கீடோ வா பதங்கோ வா தம்சோ வா மசகோ வா யத்யத் பவந்தி ததா பவந்தி – புலி, சிங்கம், ஓநாய், பன்றி, புழு, பறவை, ஈ, கொசு போன்ற எந்த உருவில் ஜீவன் உறங்கச் சென்றானோ, அதே உருவில் மீண்டும் எழுகிறான் – என்று கூறியது.

அடுத்து, ஆழ்ந்த உறக்கத்தின்போது தனது கர்மங்கள் நீங்கப்பெற்று ஒருவன் முக்தி அடைந்த ஜீவன் ஆகிறான் என்று வைத்துக்கொள்வோம். அப்படியெனில், மோக்ஷம் பற்றிக்க் கூறப்படும் விதிகள் அனைத்தும் வீணாகின்றன அல்லவோ? உறங்கச் செல்லும் ஜிவன் குறித்து சாந்தோக்ய உபநிஷத் (8–11–1) – தத் யத்ர ஏதத் ஸுஷுப்த: – ஆழ்ந்த உறக்கம் ஏற்படும்போது – என்று தொடங்கி, முடிக்கப்படும்போது (8–11–1) – நாஹ கல்வயமேவம் ஸம்ப்ரதி ஆத்மாநம் ஜாநாதி அயம் அஹம் அஸ்மி இதி நோ ஏவ இமானி பூதானி விநாசமேவ அபீத: பவதி நாஹம் அத்ர போக்யம் பச்யாமி – உறக்க நிலையில் உள்ள ஜீவன் தன்னை அறிவதில்லை, தன்னைத் தவிர்த்து உள்ள மற்ற பொருள்களையும் அறிவதில்லை, அழிந்தவன் போன்று உள்ளான், தன்னால் அனுபவிக்கத் தகுந்த பொருள்களையும் காணபதில்லை – என்று கூறியது (விழித்து எழுந்த பின்னர், இவ்விதமாக தான் எதனையும் அறியாமல் இருந்ததை உணர்க்கிறான்). ஆனால் முக்தி பெற்ற ஜீவன் பற்றி கீழே உள்ளவாறு பல வரிகள் உள்ளன.

- சாந்தோக்ய உபநிஷத் (8–12–3) – பரம் ஜ்யோதிரூப ஸம்பத்ய ஸ்வேநரூபேண அபிநிஷ்பத்யதே ஸ தத்ர பர்யேதி ஜக்ஷத் க்ரீடந் ரமமாண: – பரம ஜ்யோதியை அடைந்து, அங்கு மிகவும் மகிழ்வுடன் விளையாடி மகிழ்கிறான்.

- சாந்தோக்ய உபநிஷத் (7–25–2) – ஸ ஸ்வராட் பவதி தஸ்ய ஸர்வேஷு லோகேஷு காமசாரோபவதி – தனது கர்மபலன்கள் துறந்தவனாக, தனது விருப்பப்படி அனைத்து லோகங்களிலும் சஞ்சரித்தபடி உள்ளான்.

- சாந்தோக்ய உபநிஷத் (7–26–2) – ஸர்வம் ஹ பஸ்ய: பஸ்யதி ஸ்ர்வம் ஆப்நோதி ஸர்வஸ: – முக்தி பெற்ற ஜீவன், அனைத்தும் அறிந்தவனாக அனைத்தையும் காண்கிறான், அனைத்தையும் அனுபவிக்கிறான்.

ஆகவே உறங்கும் ஜீவன் தனது இந்த்ரியங்கள் அனைத்தும் களைப்பு அடைந்தவனாக, சற்று ஓய்வெடுக்க, பரமாத்மாவை அடைகிறான். மீண்டும் தனது கர்மபலன்களை அனுபவிக்கும் பொருட்டு விழித்து எழுகிறான்.

## அதிகரணம் – 4 –முக்தாதிகரணம்

மூர்ச்சை என்னும் மயக்க நிலை என்பது விழிப்பு, கனவு, ஆழ்ந்த உறக்கம் ஆகியவற்றைக் காட்டிலும் மாறுபட்டது என்று நிரூபிக்கப்பட உள்ளது.

**3–2–10 – முக்தே அர்த்த ஸம்பத்தி: பரிசேஷாத்**

பொருள் – மூர்ச்சை என்பது மரணத்தின் பாதி நிலையாகும். மற்றவற்றில் சேர்க்கப்பட இயலாத காரணத்தால் ஆகும்.

சந்தேகம் – இங்கு மூர்ச்சை என்னும் மயக்க நிலை ஆராயப்பட உள்ளது. இந்த நிலை என்பது விழிப்பு நிலை, கனவு நிலை மற்றும் ஆழ்ந்த உறக்க நிலை ஆகிய ஏதோ ஒன்றில் சேர்ந்ததா அல்லது அவற்றைக் காட்டிலும் மாறுபட்ட நிலை ஆகுமா?

பூர்வபக்ஷம் – மயக்கம் என்ற நிலை, மூன்று நிலைகளில் (விழிப்பு நிலை, கனவு நிலை, ஆழ்ந்த உறக்க நிலை) ஏதேனும் ஒன்றில் அடங்குவதே ஆகும். இதனை வேறு ஒரு நிலையாகக் கூறுவதற்கு ஏற்ற ப்ரமாணம் (ஆதாரம்) வேறு எதுவும் இல்லை.

ஸித்தாந்தம் – அப்படி அல்ல. மயக்கம் அடைந்தவன் மரணம் என்ற நிலையின் பாதியைக் கடந்தாகவே கொள்ளவேண்டும். எப்படி? இதுவே பொருந்துகிறது. இவ்விதம் எவ்வாறு கூற இயலும்? மூர்ச்சை (மயக்கம்) என்ற நிலையில் ஞானம் இருப்பதில்லை என்பதால், அந்த நிலையை ஞானத்துடன் கூடிய விழிப்பு நிலை அல்லது கனவு நிலையுடன் சேர்க்க இயலாது. மயக்கம் ஏற்படக் காரணம் அல்லது உடல் மாறுபாடுகள் காரணமாக மயக்க நிலை என்பதை ஆழ்ந்த உறக்கம் என்றோ, இறந்த நிலை என்றோ கூற முடியாது – மயக்கத்தின் காரணம் என்பது குச்சியால் அடிபடுவது போன்றதாகும். ஆக, எஞ்சியிருப்பது மயக்கம் என்பது மரணத்தின் பாதி நிலை என்பதே ஆகும் – காரணம் முழுமையான மரண நிலை என்பதில், உடலுக்கும் ப்ராண வாயுவிற்கும் உள்ள தொடர்ப்பு முற்றிலும் அறுந்துவிடுகிறது. ஆனால், மயக்க நிலையில் ப்ராணவாயு இருக்கிறது.

தஞ்சமடைந்த நம் ராமானுஜன் திருவடிகளே தஞ்சம்

.. .. தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:
ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாதன் திருவடிகளே சரணம்
ஸ்ரீ வேதாந்த தேசிகன் திருவடிகளே சரணம்

ஸ்ரீ வேதாந்த மஹாதேசிகன் அருளிச் செய்த

# ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம்

(பகுதி – 6)

## ஈச்வரன் எழில் பொங்கும் திவ்யமங்கள விக்ரஹம் உடையவன்

ஸதைகரூப ரூபாய, நித்யஸித்தே ததாகாரே தத்பரத்வே ச பௌஷ்கர யஸ்யாஸ்தி ஸத்தா ஹ்ருதயே தஸ்யாஸௌ ஸந்நிதிம் ப்ரஜேத், ஸமஸ்தாச்சக்த்யச்சைதா ந் ருப யத்ர ப்ரதிஷ்டிதா: தத்விச்வரூப வைரூப்யம் ரூபமன்யத்தரேர்மஹத், இச்சா க்ருஹீதாபிமதோருதேஹ:, ந பூதஸங்க ஸம்ஸ்தாநோ தேஹோ அஸ்ய பரமாத்மந:, ந தஸ்ய ப்ரக்ருதா மூர்த்தி: மாம்ஸமேதோ அஸ்திஸம்பவா, பூஜைச்சதுர்பி: ஸமுபேதமேதத்ரூபம் விசிஷ்டம் திவி ஸம்ஸ்திதம் ச, ருக்மாபம்ஸ்வபங் தீ கம்யம், தத்ரைகஸ்தம் ஜகத் க்ருத்ஸ்நம், பச்யாமி தேவாம்ஸ்தவ தேவ தேஹே, அஸ்த்ர பூஷண ஸம்ஸ்தாந ஸ்வரூபம், பூஷணாஸ்த்ர ஸ்வரூபஸ்தம் யதேதமகிலம் ஜகத், தமஸா: பரமோ தாதா சங்கம் சக்ர கதா தர: என்கிறபடியே ஸர்வஜகதாச்ரயமான அப்ராக்ருத திவ்யமங்கள விக்ரஹ விசிஷ்டமாக அனுஸந்தேயம். இவ்விக்ரஹம் பர வ்யூஹ விபவ ஹார்த்தர்சாவதார ரூபேண பஞ்சப்ரகாரமாயிருக்கும்படியும் இவற்றிலுள்ள விசேஷங்களும் பகவச்சாஸ்த்ர ஸம்ப்ரதாயத்தாலே அறியப்படும்.

விளக்கம் – அனைத்து உலகங்களுக்கும் இருப்பிடமாக உள்ள எம்பெருமானின் திருமேனியானது அப்ராக்ருதமானது, திவ்யமானது, மங்களகரமானது என்று அறியவேண்டும். இந்தக் கருத்துக்களை பாஞ்சராத்ர ஆகமத்திலிருந்தும் மற்ற ஸம்ப்ரதாய முறைகளிலிருந்தும் அறியலாம். இதனைக் கீழே உள்ள பல வரிகளிலும் காண்க:

- விஷ்ணு புராணம் (1–2–1) – ஸதைகரூப ரூபாய – எப்போதும் மாறாமல் ஒரே போன்ற திருமேனி உள்ளவன்.

- பௌஷ்கர ஸம்ஹிதை – நித்யஸித்தே ததாகாரே தத்பரத்வே ச பௌஷ்கர யஸ்யாஸ்தி ஸத்தா ஹ்ருதயே தஸ்யாஸௌ ஸந்நிதிம் ப்ரஜேத் – பௌஷ்கரனே எப்போதும் உள்ள அவனது திருமேனி குறித்தும், அவனே அனைத்திலும் மேம்பட்டவன் என்பது குறித்தும் யாருக்கு அசைக்க இயலாத நம்பிக்கை உள்ளதோ அவனிடம் எம்பெருமான் எப்போதும் உள்ளான்.

- விஷ்ணு புராணம் (6–7–70) – ஸமஸ்தாச்சக்த்யச்சைதா ந் ருப யத்ர ப்ரதிஷ்டிதா: தத்விச்வரூப வைரூப்யம் ரூபமன்யத்தரேர்மஹத் – இந்த உலகில் காணப்படும் சரீரங்கள் அனைத்தைக் காட்டிலும் வேறானதாக ஸ்ரீஹரியின் திருமேனி உள்ளது. அந்தத் திருமேனியிலேயே அனைத்து சக்திகளும் நிலையாக உள்ளன.

- விஷ்ணு புராணம் (6–5–84) – இச்சா க்ருஹீதாபிமதோருதேஹ: – அனைவருக்கும் இன்பம் அளிக்கும் விதமான திருமேனியைத் தனது ஸங்கல்பத்தால் எடுத்துக் கொள்பவன்.

- மஹாபாரதம் சாந்திபர்வம் (206–60) – ந பூதஸங்க ஸம்ஸ்தானோ தேஹோ அஸ்ய பரமாத்மந: – பரமாத்மாவின் திருமேனி பஞ்சபூதங்கள் சேர்வதால் உண்டாகும் சரீரம் அல்ல.

- வராஹ புராணம் (31–40) – ந தஸ்ய ப்ரக்ருதா மூர்த்தி: மாம்ஸமேதோ அஸ்திஸம்பவா – எம்பெருமானின் திருமேனியானது மாமிஸம், மஜ்ஜை, எலும்பு ஆகியவற்றால் ஆன சரீரம் அல்ல.

- மஹாபாரதம் மௌஸலபர்வம் (5–34) – பூஜைச்சதுர்பி: ஸமுபேதமேதத்ருபம் விசிஷ்டம் திவி ஸம்ஸ்திதம் ச – அவனது திருமேனி நான்கு திருக்கரங்களுடன் உள்ளது, மிகவும் மேன்மை உடையது, பரமபதத்தில் உள்ளது.

- மனு ஸ்ம்ருதி (12–122) – ருக்மாபம்ஸ்வபந் தீ கம்யம் – தங்கம் போன்று ப்ரகாசம் உடையவன். அவனை மனதால் கனவில் காண்பது போன்று மட்டுமே அடைய இயலும்.

- ஸ்ரீமத் பகவத் கீதை (11–13) – தத்ரைகஸ்தம் ஜகத் க்ருத்ஸ்நம் – அவனது திருமேனியில் இந்த உலகம் ஒரு சிறிய பகுதியாக உள்ளதைக் கண்டான்.

- ஸ்ரீமத் பகவத் கீதை (11–15) – பச்யாமி தேவாம்ஸ்தவ தேவ தேஹே – தேவாதிதேவனே உனது திருமேனியில் அனைத்து தேவதைகளையும் நான் காண்கிறேன்.

- விஷ்ணு புராணம் (1–22–76) – அஸ்த்ர பூஷண ஸம்ஸ்தாந ஸ்வரூபம் – ஆயுதங்களும் ஆபரணங்களும் தங்கும் இடமாக அவன் திருமேனி உள்ளது.

- விஷ்ணு புராணம் (1–22–66) – பூஷணாஸ்த்ர ஸ்வரூபஸ்தம் யதேதமகிலம் ஜகத் – இந்த உலகங்கள் முழுவதும் அவனது திருமேனியில் ஆபரணங்களாகவும் ஆயுதங்களாகவும் உள்ளன.

- வால்மீகி இராமாயணம் யுத்த காண்டம் (114–25) – தமஸா: பரமோ தாதா சங்கம் சக்ர கதா தர: – ப்ரக்ருதிக்கும் மேலே உள்ளவனாகவும், சங்கு–சக்ர–கதை உள்ளவனாகவும்.

## ஈச்வரனின் விபூதிகள்

விஷ்ணோரேதா விபூதய:, மஹாவிபூதி ஸம்ஸ்தாந, நாந்த: அஸ்தி மம திவ்யானாம் விபூதினாம் பரந்தப இத்யாதிகளுடைய ஸங்க்ரஹமான யதண்டமண்டாந்தர கோசரம் ச யத் என்கிற ச்லோகத்தின்படியே அனந்த விபூதி விசிஷ்டமாக அனுஸந்தேயம்.

விளக்கம் – அவனது விபூதிகள் மிகவும் சிறப்புடையவை, எல்லையற்றவை என்பதைக் கீழே உள்ள வரிகளில் உணரலாம்:

- விஷ்ணு புராணம் (1–22–32) – விஷ்ணோரேதா விபூதய: – இவை அனைத்தும் விஷ்ணுவின் விபூதிகள்

- விஷ்ணு புராணம் (5–1–50) – மஹாவிபூதி ஸம்ஸ்தாந – மஹாவிபூதி எனப்படும் பெரிய விபூதியைத் தனது இருப்பிடமாக உள்ளவன்.

- ஸ்ரீமத் பகவத் கீதை (10–40) – நாந்த: அஸ்தி மம திவ்யானாம் விபூதினாம் பரந்தப – அர்ஜுனா, எனது மேன்மையான விபூதிகளுக்கு எல்லையில்லை.

- ஆளவந்தாரின் ஸ்தோத்ர ரத்னம் (17) – யதண்டமண்டாந்தர கோசரம் ச யத் – அண்டம் என்னும் இப்ப்ரபஞ்சமும், இந்த அண்டத்தில் உள்ள அனைத்தும் அவனது விபூதிகள்

## லீலாரூபம் கொண்டவன்

இவ்விபூதிகளில் சேதநங்களாயும் அசேதநங்களாயுமுள்ள இரண்டு வகையும் லீலார்த்தங்களாயும் போகார்த்தங்களாயும் விபக்தங்களாயிருக்கும் அனுஸந்தேயம் பொதுவாயிருக்க ரஸ வைஷம்யத்தாலே லீலா–போக–விபாகம் யதாலோகம் கண்டு கொள்வது. அப்படியே ஜன்மாத்யஸ்ய யத:, க்ரீடா ஹரேரிதம் ஸர்வம், க்ரீடதோ பாலகஸ்யேவ, பால: க்ரீடநகைரிவ, ஹரே விஹரஸி க்ரீடா கந்துகைரிவ ஜந்துபி:, லோகவத்து லீலா கைவல்யம் என்கிறபடியே லீலாரூப ஜகத்வ்யாபார லக்ஷணமாக அனுஸந்தேயம்.

விளக்கம் – எம்பெருமானின் விபூதிகள் சேதனம் என்றும் அசேதனம் என்றும் இரு வகைப்படும். இவை அவனது லீலைக்காகவும் அனுபவிப்பதற்காகவும் உள்ளன. இவ்விதம் அவனது லீலைக்காகவும், அனுபவத்திற்காகவும் உள்ளன என்ற பிரிவு ரஸத்திற்காக மட்டுமே உள்ளது அன்றி, அனைத்தும் பொதுவாக அவனால் ஏற்கும்படியே உள்ளன. பகவான் இந்த உலகில் ஈடுபட்டபடி உள்ளது என்பது அவனது லீலை காரணமாகவே என்பதைக் கீழே உள்ள வரிகளின் மூலம் அறியலாம்:

- ப்ரஹ்ம சூத்ரம் (1–1–2) – ஜன்மாத்யஸ்ய யத: – அவனிடமிருந்தே அனைத்தும் தோன்றுகின்றன.

- மஹாபாரதம் சாந்தி பர்வம் (206–58) – க்ரீடா ஹரேரிதம் ஸர்வம் – இவை அனைத்தும் ஸ்ரீஹரியின் விளையாட்டு.

- விஷ்ணு புராணம் (1–2–18) – க்ரீடதோ பாலகஸ்யேவ – சிறு குழந்தையின் விளையாட்டு போன்று அவனுக்குச் சுலபமானது.

- மஹாபாரதம் சபா பர்வம் (40–78) – பால: க்ரீடநகைரிவ – பொம்மைகள் வைத்து விளையாடும் குழந்தை போன்று, நம்மை வைத்து விளையாட்டு செய்கிறான்.

- விஷ்ணு தர்மம் – ஹரே விஹரஸி க்ரீடா கந்துகைரிவ ஜந்துபி: – பந்துகள் வைத்து விளையாடுவது போன்று ஸ்ரீஹரியே உனது விளையாட்டு உள்ளது.

- ப்ரஹ்ம சூத்ரம் (2–1–33) – லோகவத்து லீலா கைவல்யம் – இவை அனைத்தும் அவனது விளையாட்டுக்காகவே.

## ஜீவனின் ஸ்வரூபம்

இப்படி லக்ஷ்மீ ஸஹாயமாய், அபரிமித ஞானானந்தமாய், ஹேயப்ரத்யநீகமாய், ஞான–சக்த்யாத்யனந்த–மங்களகுண–விசிஷ்டமாய், திவ்யமங்கள–விக்ரஹோபேதமாய், சரீரபூத–விபூதித்வய–யுக்தமாய், ஜகத்ஸ்ருஷ்ட்யாதி–வ்யாபார–லீலமாய்க் கொண்டு ப்ராப்யமான ப்ரஹ்மத்தை ப்ராபிக்கும் ப்ரத்யகாத்மாவினுடைய பத்த–முக்த–நித்ய–ஸாதாரண–ரூபமும் உபாயாதிகாரியான தனக்கு இப்போது அஸாதாரணமான ரூபமுமறிய வேணும்.

விளக்கம் – இவ்விதம் அடையவேண்டிய பொருளான (ப்ராப்யம்) எம்பெருமான் மஹாலக்ஷ்மியுடன் எப்போதும் இணைந்தவனாக உள்ளான். அவன் எல்லையற்ற ஞானம், எல்லையற்ற ஆனந்தம் கொண்டவனாக உள்ளான். தாழ்வுகள் அனைத்திற்கும் எதிர்தட்டாக உள்ளான். ஞானம், சக்தி, ஆனந்தம் போன்ற மங்கள குணங்களை அளவற்று உடையவனாக உள்ளான். திவ்யமங்கள விக்ரஹம் கொண்டவனாக உள்ளான். தன்னுடைய சரீரமாக நித்யவிபூதி மற்றும் லீலா விபூதி ஆகிய இரண்டையும் கொண்டுள்ளான். தன்னுடைய பொழுதுபோக்கிற்காக உலகில்

உள்ள அனைத்தையும் படைத்தும், காத்தும், நிர்வகித்தும் வருகிறான். இப்படிப்பட்ட ப்ரஹ்மமான எம்பெருமானை அடைய எண்ணும் ஜீவன் – பத்தர், முக்தர், நித்யர் ஆகிய மூன்று ஜீவன்களைப் பற்றி அறியவேண்டும். தனக்கு உள்ள வேறுபாட்டினை அறியவேண்டும்.

## மூன்று வகையான சேதனர்கள்

இவர்களில் பத்தரானவர் அநாதி கர்ம ப்ரவாஹத்தாலே அனுவ்ருத்த ஸம்ஸாரராய் ப்ரஹ்மாதி ஸ்தம்ப பர்யந்த விபாக பாகிகளான க்ஷேத்ரஜ்ஞர். முக்தராவார் சாஸ்த்ர சோதிதங்களான உபாய விசேஷங்களாலுண்டான பகவத்ப்ரஸாதத்தாலே அத்யந்த நிவ்ருத்த ஸம்ஸாரராய் ஸங்கோச ரஹித பகவதனுபவத்தாலே நிரதிசயானந்தராயிருக்குமவர்கள். நித்யராவார் ஈச்வரனைப் போலே அனாதியாக ஞானசங்கோசமில்லாமையாலே ஸவயஸ இவ யே நித்ய நிர்தோஷ கந்தா: என்கிறபடியே அஸ்ப்ருஷ்ட ஸம்ஸாரராய்க் கொண்டு நித்யகைங்கர்யம் பண்ணுகிற அனந்த கருட விஷ்வக்ஸேனாதிகள்.

விளக்கம் – பத்தர்கள் என்பவர்கள் எல்லையற்ற காலமாகத் தொடந்து வரும் கர்மம் காரணமாக ஸம்ஸாரம் என்ற சக்கரத்தில் உழன்றபடி உள்ளவர்கள் ஆவார்கள். ப்ரம்மன் தொடக்கமாக புல் ஆகிய அனைத்தும் க்ஷேத்ரஜ்ஞர் என்பதாகும். முக்தர் என்பவர்கள் சாஸ்த்ரங்களில் கூறிய உபாயங்களைச் சரியானபடி பின்பற்றி, பகவானின் கருணையைப் பெறுகின்றனர், இதனால் ஸம்ஸாரத்திலிருந்து விடுபட்டு, பகவத் அனுபவம் கிட்டப்பெற்றதால், எல்லையற்ற ஆனந்தத்தில் மூழ்கியபடி உள்ளனர். நித்யர்கள் என்பவர்கள் தங்களது ஞானம் எப்போதும் சுருங்காமல் உள்ளவர்கள் ஆவர், இந்த விஷயத்தில் அவர்கள் ஈச்வரனையே ஒத்துள்ளனர், இதனை ஸ்ரீகுணரத்னகோஸத்தில் (27) பராசரபட்டர் – ஸவயஸ இவ யே நித்ய நிர்தோஷ கந்தா – அவனைப் போன்றே ஒத்த வயது கொண்டவர்களாகவும், அவனைப் போன்றே தோஷங்கள் அற்றவர்களாகவும் – என்று கூறினார். இவர்கள் ஸம்ஸாரத்தில் சிக்காமல் பகவானுக்கு எப்போதும் கைங்கர்யம் செய்தபடி உள்ள ஆதிசேஷன், கருடன், விஷ்வக்ஸேனர் முதலானோர் ஆவர்.

இவர்களெல்லார்க்கும் ஸாதாரணமான ரூபம் அணுத்வஞானானந்தாமலத்வாதிகளும் பகவச்சேஷத்வ பாரதந்த்யாதிகளும். முமுக்ஷுவான தனக்கு அஸாதாரணமாக அறிய வேண்டும் ஆகாரங்கள் உபோதாத்திலே சொன்னோம், மேலும் கண்டு கொள்வது.

விளக்கம் – இவர்கள் அனைவருக்கும் பொதுவானதாக உள்ள தன்மைகள் – அணு போன்று அளவுள்ள தன்மை, ஞானமயமாக இருத்தல், ஆனந்தமயமாக இருத்தல், தோஷங்கள் அற்று இருத்தல் – என்பவையாகும். இவர்கள் அனைவரும் எம்பெருமானுக்கு அடிமைகளாகவும், அவனது ஸங்கல்பத்திற்கு அடிபணிந்தபடியும் உள்ளனர். இவர்களில் முமுக்ஷுவுக்கு உள்ள விசேஷம் என்னவென்று அறிந்து கொள்ளவேண்டும். இதனை உபோத்காத அதிகாரத்தில் நாம் கண்டோம், இனிவரும் அதிகாரங்களிலும் கூறப்படுவது காண்க.

## ரஹஸ்யத்ரயத்தில் ஜீவனின் ஸ்வரூபம் பற்றிக் கூறப்படுவது

இப்ராப்தாவினுடைய ஸ்வரூபம் ப்ரணவ நமஸ்ஸுக்களில் மகாரங்களிலும், நார சப்தங்களிலும், ப்ரபத்யே என்கிற உத்தமனிலும், வ்ரஜ என்கிற மத்யமனிலும், த்வா என்கிற பதத்திலும், மா சுச: என்கிற வாக்யத்திலும் அனுஸந்தேயம்.

விளக்கம் – ஜீவனின் ஸ்வரூபம் குறித்து அஷ்டாக்ஷரத்தில் ஓம் என்பதில் உள்ள – ம – என்ற எழுத்து மூலமும், நம என்ற பதம் மூலமும், நாராயணா என்பதில் உள்ள நார என்ற பதம் மூலமும் அறிவிக்கப்பட்டது, த்வயத்தில், ப்ரபத்யே என்ற பதம் மூலம் உணர்த்தப்பட்டது, சரமச்லோகத்தில், வ்ரஜ என்பதன் மூலமும், த்வா என்பதன் மூலமும், மா சுச: என்ற வரி மூலமும் அறிவுறுத்தப்பட்டது.

## உபாயங்கள் பற்றிக் கூறுதல்

ப்ராப்த்யுபாயமும் இதின் பரிகரங்களும் பலஸ்வரூபமிருக்கும்படியும் மேலே ப்ராப்தஸ்தலங்களிலே பரக்கச் சொல்லக் கடவோம். இவற்றில் உபாயம் திருமந்த்ரத்தில் நமஸ்ஸிலும், அயந சப்தத்திலும், த்வயத்தில் பூர்வ கண்டத்திலும், சரமச்லோகத்தில் பூர்வார்த்தத்திலும் அனுஸந்தேயம். பலஸ்வரூபம் சதுர்த்யந்த பதங்களிலும், த்வயத்தில் நமஸ்ஸிலும், ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி என்கிறவிடத்திலும் அனுஸந்தேயம்.

விளக்கம் – (பரம்பொருளை) அடையும் உபாயம் பற்றியும், அவ்விதம் அடைந்த பின்னர் கிட்டும் பலன்கள் பற்றியும் நாம் பின்னால் பல இடங்களில் விவரித்துக் கூறுவோம். உபாயம் என்பது திருமந்த்ரத்தில் உள்ள நம என்ற பதம் மூலமும், நாராயணாய என்பதில் உள்ள அயந என்பதன் மூலமும் அறியக்கடவது. உபாயம் குறித்து த்வய மந்த்ரத்தின் முதல் வரியிலும், சரமச்லோகத்தின் இரண்டாவது வரியிலும் உணரலாம். பலன் பற்றி திருமந்த்ரத்தில் நாராயணனுக்கு என்று கூறும் நான்காம் வேற்றுமை மூலமும், த்வயத்தில் உள்ள நம என்ற பதம் மூலமும், சரமச்லோகத்தில் உள்ள – பாவங்களிலிருந்து நான் விடுவிக்கிறேன் – என்பதன் மூலமும் அறியலாம்.

## தடுக்கும் விரோதிகள்

ப்ராப்தி விரோதியாவது அவித்யா–கர்ம–வாஸனாதி–ரூபமான மோக்ஷ ப்ரதிபந்தக வர்க்கம். இதில் ப்ரதானம் அனாதியாக ஸந்தன்யமானமான ஆஜ்ஞாதி லங்கன மடியாகப் பிறந்த பகவாந்நிக்ரஹம். இது க்ஷேத்ரஜ்ஞர்க்கு – ஞானஸங்கோசகரமான த்ரிகுணாத்மக ப்ரக்ருதி ஸம்ஸர்க்க விசேஷத்தை உண்டாக்கியும், இப்ப்ரக்ருதி பரிணாம விசேஷங்களான சரீரேந்த்ரியாதிகளோடே துவக்கி திண்ணமழுந்தக் கட்டி பல செய்வினை வன்கயிற்றால் புண்ணை மறையவரிந்தென்னைப் போரவைத்தாய் புறமே என்றும், அந்நாள் நீ தந்த ஆக்கையின் வழியுழல்வேன் என்றும் சொல்லுகிறபடியே தேஹேந்த்ரியாதி பரதந்த்ரனாக்கியும், அவ்வவஸ்தையிலும் சாஸ்த்ரவச்யதை கூடாத திர்யகாதி தசைகளிலே நிறுத்தியும், சாஸ்த்ர யோக்யங்களான மனுஷ்யாதி ஜன்மங்களில் பாஹ்யகுத்ருஷ்டி மதங்களாலே கலக்கியும், அவற்றில் இழியாதவர்களையுமுள்பட பகவத்ஸ்வரூப திரோதானகரீம் விபரீத ஞான ஜனனீம் ஸ்வவிஷயாயாச்ச கோப்யபுத்தேர்ஜனனீம் என்கிறபடியே இம்மூலப்ரக்ருதி முதலான மோஹன பிஞ்சிகை தன்னாலே தத்வஞான விபரீதஞான விஷய ப்ராவண்யங்களைப் பண்ணியும், இவையடியாக ஆவி திகைக்க ஐவர் குமைக்கும் சிற்றின்பம் பாவியேனைப் பல நீ காட்டிப் படுப்பாயோ என்கிறபடியே ஸூக லவார்த்தமான அக்ருத்ய கரணாதி ரூபமான ஆஜ்ஞாதிலங்கனத்தைப் பண்ணுவித்தும், பாபம் ப்ராஜ்ஞாம் நாசாயதி க்ரியமாணம் புந: புந: நஷ்டப்ரஜ்ஞ: பாபமேவ புநராரபதே நர: என்கிறபடியே மேலும் அபராத பரம்பரைகளிலே மூட்டி அதன் பலமாக க்ஷிபாம்யஜஸ்ரம் இத்யாதிகளிற்படியே கர்ப்ப ஜன்ம ஜரா மரண நரகாதி சக்ர பரிவ்ருத்தியிலே பரிப்ரமிப்பித்தும், க்ஷூத்ர ஸூகாதிகளுக்கு ஸாதனமான ராஜஸ தாமஸ சாஸ்த்ரார்த்தங்களைக் கொண்டு யக்ஷ ரக்ஷாம்ஸி ராஜஸா: ப்ரேதான் பூதகணாம்ச்சான்யே யஜந்தே தாமஸா ஜனா: என்கிறபடியே தன்னோடு ஒக்கவொழுகு சங்கிலியிலே கட்டுண்டு உழலுகிற க்ஷேத்ரஜ்ஞர் காலிலே விழப்பண்ணியும், அவர்கள் கொடுத்த ஜூகுப்ஸாவஹ க்ஷூத்ர புருஷார்த்தங்களாலே க்ருமிகளைப்போலே க்ருதார்த்தராக மயக்கியும், யோக ப்ரவ்ருத்தரானவர்களையும் க்ஷூத்ர தேவதா யோகங்களிலேயாதல் நாமாத்ய சேதனோபாஸனங்களிலேயாதல் மூளப்பண்ணிச் சில்வானங்களான பலங்களாலே யோகத்தைத் தலைசாய்ப்பித்தும், ஆத்மப்ரவணரையும் ப்ரக்ருதி ஸம்ஸ்ருஷ்டம் ப்ரக்ருதி வியுக்தமென்கிற இவ்விரண்டு படியிலும் ப்ரஹ்மாத்யஷ்டையாலேயாதல், ஸ்வரூப மாத்ரத்தாலேயாதல் உபாஸிக்க மூட்டி அவை நாலுவகைக்கும் பலமாக அல்பாஸ்வாதங்களைக் கொடுத்து புனராவ்ருத்தியைப் பண்ணியும், ப்ரஹ்மாத்மக ஸ்வாத்மசிந்தன ப்ரவ்ருத்தரான வர்களையும் ஸ்வாத்மசரீரக பரமாத்ம சிந்தனபரரையும் அந்தராயமான ஆத்மானுப வத்தாலேயாதல், அஷ்டைள ஸ்வர்யஸித்திகளாலேயாதல், வஸ்வாதிபதப்ராப்தி ப்ரஹ்மகாயநிஷேவணாதிகளாலேயாதல், அபிஷேகத்துக்கு நாளிட்ட ராஜகுமாரனுக்குச் சிறையிலே எடுத்துக் கை நீட்டின சேடிமார் பக்கலிலே கண்ணோட்டமுண்டாமாப் போலே ப்ராரப்த கர்மபலமான தேஹேந்த்ரியங்களிலும் ததனுபந்திகளான பரிக்ரஹங்களிலும் தன்மூல போகங்களிலும் கால்தாழப் பண்ணியாதல் அன்யபரராக்கியும் இப்படிப் பல முகங்களாலே பகவத்ப்ராப்திக்கு

விலக்காயிருக்கும், முப்பத்திரண்டடியான துரவுதத்துவார் முன்னடியிலே விழுந்ததோடு முப்பதாமடியிலே அந்தராயமுண்டானாலும் இவன் ஸம்ஸாரத்தைக் கடந்தானாகான்.

விளக்கம் – மோக்ஷம் பெறுவதற்குத் தடையாக உள்ளவர் அறியாமை (அவித்யை), கர்மம், வாசனை, ப்ரக்ருதி தொடர்பு முதலானவை ஆகும். இதில் முதலாவது தடையாக உள்ளது எதுவென்றால், எல்லையற்ற காலமாக பகவானின் கட்டளைகளைத் தொடர்ந்து மீறியபடி உள்ளதால், அதற்காக அவன் அளிக்கும் தண்டனைகளே ஆகும். இதன் காரணமாக கீழே உள்ள பலவும் நிகழ்கின்றன:

1. மூன்று குணங்களுடன் கூடியதான ப்ரக்ருதியுடன் ஜீவனுக்குத் தொடர்பு ஏற்பட்டு, அதனல் அவனது ஞானம் சுருங்கி விடுகிறது.

2. ஜீவனையும், ப்ரக்ருதி தொடர்புடைய சரீர–இந்த்ரியங்களையும் சேர்த்து விடுகிறது. மேலும் ஜீவனை சரீர–இந்த்ரியங்களின் பிடிகளில் சிக்கவைக்கிறது. இதனை நம்மாழ்வார் திருவாய்மொழியில் (5–1–5) – திண்ணமழுந்தக் கட்டி பல செய்வினை வன்கயிற்றால் புண்ணை மறையவரிந்தென்னைப் போரவைத்தாய் புறமே – எனது கர்மபலன் மூலம் உண்டான பாவம் என்னும் கயிற்றால், என்னை இந்த உடலுடன் அழுத்தமாகக் கட்டி, புண் நிறைந்த சரீரத்தை தோலால் மூடி உலவ வைத்தாய் – என்றும், (3–2–1) – அந்நாள் நீ தந்த ஆக்கையின் வழியுழல்வேன் – ஸ்ருஷ்டியின்போது உண்டான சரீரத்தின் மகிழ்வுக்காகத் திரிவேன் – என்றும் கூறினார்.

3. ஜீவனை சாஸ்த்ரங்களைப் பின்பற்ற இயலாத விலங்கு போன்ற சரீரம் எடுக்கும்படிச் செய்து விடுகிறது.

4. சாஸ்த்ரங்களைப் பின்பற்றக் கூடிய மனிதப் பிறவி அளித்தாலும், அவன் மனதை, வேதங்களுக்குத் தவறான விளக்கம் கூறும் மதங்களில் ஈடுபடுத்துகிறது.

5. ராமானுஜர் சரணாகதி கத்யத்தில் – பகவத்ஸ்வரூப திரோதானகரீம் விபரீத ஞான ஜனனீம் ஸ்வவிஷயாயாச்ச போக்யபுத்தேர்ஜனனீம் – எம்பெருமானின் ஸ்வரூபம் குறித்து அறிய இயலாதபடி செய்வதும், ஒரு பொருளை வேறொன்றாக அறியும்படிச் செய்வதும், தானே தனக்கு இன்பமானவன் என்ற எண்ணம் தோன்றும்படிச் செய்வதும் ஆகிய ப்ரக்ருதியை – என்றார். மாயாஜாலம் செய்யும் ஒருவன், அனைவரையும் மயக்கும் பொருட்டு, தனது கைகளில் வைத்துள்ள மயில்தோகை போன்று, ப்ரக்ருதியானது சரீரத்தையும் இந்த்ரியங்களையும் வைத்துள்ளது. இதன் மூலம் ஜீவனை மயக்கி அவனுக்கு உண்மை எது என்ற அறியாமை, தவறான அறிவு, புலன் விஷயங்களில் ஈடுபடுதல் போன்றவற்றை உண்டாக்குகிறது.

6. இப்படியாக, ஜீவனை பகவானின் ஆணைகளைப் பின்பற்றாமல் இருக்கச் செய்துவிடுகிறது. தனது இன்பங்களுக்காகத் தடுக்கப்பட்ட செயல்களில் ஈடுபடும்படிச் செய்கிறது. இதனை நம்மாழ்வார் திருவாய்மொழியில் (6–9–9) – ஆவி திகைக்க ஐவர் குமைக்கும் சிற்றின்பம் பாவியேனைப் பல நீ காட்டிப் படுப்பாயோ – எனது ஆத்மா திகைத்து நிற்கும்படி ஐந்து இந்த்ரியங்களும் என்னைக் கட்டி இழுக்கின்றன, இவ்விதம் சிற்றின்பத்தால் பாவியான என்னை மேலும் நீ வருந்தும்படிச் செய்யலாமோ? – என்றார்.

7. ஒரு தவறு என்பது மேலும் மேலும் பாவங்களாக வளர்கின்றன. இதனை மஹாபாரதம் உத்யோக பர்வம் (35–73) – பாபம் ப்ராஜ்ஞாம் நாசாயதி க்ரியமாணம் புந: புந: நஷ்டப்ரஜ்ஞ: பாபமேவ புநராரபதே நர: – மீண்டும் மீண்டும் செய்யப்படும் பாவம் அறிவை அழித்து விடுகிறது, இவ்விதம் அறிவை இழந்த ஒருவன் மேலும் மேலும் பாவங்களையே செய்கிறான் – என்றது. இதன் காரணமாக ஜீவனை கர்ப்பம் – பிறப்பு – கிழத்தன்மை – மரணம் – நரகம் என்னும் சுழற்சியில் ஆழ்த்தி விடுகிறான். இதனைக் கீதையில் (16–19) – க்ஷிபாம்யஜஸ்ரம் – அவர்களை அசுர கர்ப்பத்தில் தள்ளுகிறேன் – என்றான்.

8. க்ஷூத்ர சுகங்களுக்கு உறுப்பாக உள்ள ராஜஸ – தாமஸ சாஸ்த்ரங்களைக் கைக்கொள்கின்றனர். இதனால் அவர்கள் தங்களைப் போன்றவர்களும், தங்களுக்குச் சமமான சங்கிலிகளால் கட்டப்பட்டவர்களும் ஆகிய க்ஷூத்ர

தெய்வங்களின் கால்களின் விழும்படி ஆகிறது. இதனை கீதையும் (17–4) – யக்ஷ ரக்ஷாம்ஸி ராஜஸா: ப்ரேதான் பூதகணாம்ச்சான்யே யஜந்தே தாமஸா ஜனா – ரஜோகுணம் மேலோங்கி உள்ளவர்கள், யக்ஷர்கள் மற்றும் அசுரர்களை ஆராதனை செய்கின்றனர், தமோகுணம் மேலோங்கி உள்ளவர்கள், பூதங்களையும் ப்ரேதங்களையும் ஆராதனை செய்கின்றனர் – என்றது காண்க.

9. இந்த க்ஷுத்ர தெய்வங்கள் இவர்களுக்கு அருவருப்பைத் தரும் மிகவும் தாழ்ந்த பலன்களை அளிக்கின்றன. சேற்றில் மகிழ்வாக உள்ள புழுக்கள் போன்று, இந்த அற்பப் பலன்களைத் தங்களுக்குக் கிட்டிய உயர்ந்த பலனாக எண்ணியபடி உள்ளனர்.

10. யோகங்களில் ஈடுபட்ட பலரும் தாழ்ந்த தேவதைகளையே உபாஸிக்கின்றனர். ஒரு சிலர் தாழ்ந்த தேவதைகளை உபாஸிப்பதைக் கைவிட்டு, நாம உபாஸனத்தில் ஈடுபடுகின்றனர் (நாம உபாஸனம் என்பது – வாக்கு, மனம், நீர் முதலான அசேதனங்களை ப்ரஹ்மமாக எண்ணி உபாஸனை செய்தல். இது சாந்தோக்ய உபனிஷத்தில் கூறப்பட்ட பூமவித்யை என்பதாகும்). இதன் மூலம் கிட்டப்பெறும் தாழ்ந்த பலன்களில் அவர்கள் ஈடுபடும்படி ஆகிறது. இப்படியாக யோகம் என்பது அவர்களுக்கு மிகவும் பயனுள்ளதாகச் செய்யப்படுகிறது.

11. அடுத்து ஆத்மாவின் விஷயத்தில் ஈடுபட்டபடி உள்ளவர்கள் காண்போம். ஆத்மாவானது ப்ரக்ருதியுடன் தொடர்புடையதாகவோ அல்லது தொடர்பற்றதாகவோ கருதியபடி த்யானிக்கின்றனர். மேலும் ப்ரஹ்மாகவோ, ஆத்ம ஸ்வரூபமாகவோ த்யானித்தபடி உள்ளனர். இப்படியாக உள்ள நான்கு வகைத் த்யானங்களில் ஈடுபட்ட இவர்கள், பகவத் அனுபவத்தை விட, மிகவும் தாழ்ந்த ஆத்ம அனுபவத்தை பலனாக அடைகின்றனர். அதன் பின்னர் மீண்டும் ஸம்ஸாரத்தில் சிக்குகின்றனர்.

12. ஒரு சிலர் ப்ரஹ்மத்தையே த்யானித்தபடி இருக்கக்கூடும். ஆனால் இவர்கள் தங்களது ஆத்மாவை த்யானித்து, தங்களின் அந்தர்யாமியாக ப்ரஹ்மம் இருப்பதாகவும், தங்களது ஆத்மாவைத் தனது சரீரமாக ப்ரஹ்மம் கொண்டுள்ளது என்றும் த்யானிக்கின்றனர். ஆக இவர்கள் மறைமுகமாகத் தங்கள் ஆத்மாவிலேயே ஈடுபடுவதால், கைவல்ய நிலையை அடைகின்றனர். அல்லது எட்டு விதமான ஸித்திகளை அடைந்து (அஷ்டமாஸித்தி) விடுகின்றனர். அல்லது வசுக்கள் போன்ற பிறவி அடைகின்றனர். அல்லது ப்ரம்மன் முதலானோரின் உடலில் புகும் தன்மை பெறுகின்றனர். இவர்களின் நிலை எவ்விதம் உள்ளது என்றால் – மணிமகுடம் சூட்டுவதற்கான நிலையில் உள்ள அரசகுமாரன், தான் சிறையில் இருந்தபோது தன்னைப் பார்த்துக்கொண்ட பணிப்பெண்கள் பக்கம் சாய்வது போன்று உள்ளது. ஆக இவர்கள் மிகவும் உயர்ந்த புருஷார்த்த நிலையில் இருந்து நழுவுகின்றனர் என்று கருத்து.

ஆக, தங்கள் கர்மபலன் காரணமாக உண்டான சரீரம் மற்றும் இந்த்ரியங்களால் அலைக்கழிக்கப்படுகின்றனர். அவைகளின் மூலம் ஏற்படும் போகங்களில் திளைத்தபடி உள்ளனர். ஆக இவர்கள் தங்கள் புருஷார்த்தத்தைக் கைவிட்டு தாழ்ந்த இன்பங்களில் ஈடுபட்டபடி உள்ளனர். இப்படியாக பகவானை அடைவதற்குப் பல தடைகள் உள்ளன. சரியான பாதையில் செல்ல முப்பத்திரண்டடி உள்ளது என்று வைத்துக் கொள்வோம். இதில் ஒருவன் முதல் படியில் தடுக்கி விழுந்தாலும், முப்பத்திரண்டாவது படியில் தடுக்கி விழுந்தாலும் என்ன வேறுபாடு உள்ளது? இதுபோன்று எந்தச் சூழலாக இருந்தாலும், எந்தக் காலமாக இருந்தாலும் மேலே கூறப்பட்ட தடைகள் ஏற்படுமாயின், ஜீவன் ஸம்ஸாரத்தில் உழன்றபடி இருப்பான்.

கர்மயோகாதிகளில் ப்ரவ்ருத்தனுக்கு நேஹாபிக்ரம நாசோ அஸ்தி இத்யாதிகளிற்படியே இட்டபடை கற்படையாய் என்றேனுமொரு நாள் பலஸித்தியுண்டாமென்கிறவிதுவும் கல்பாந்தர மன்வந்தர யுகாந்தர ஜன்மாந்தராதிகளில் எதிலேயென்று தெரியாது. அனுகூல்யம் மிகவுமுண்டாயிருக்க வஸிஷ்டாதிகளுக்கு விலம்பங்காணா நின்றோம். ப்ரதிகூல்யம் மிகவுண்டாயிருக்க வ்ருத்ர க்ஷத்ரபந்து ப்ரப்ருதிகளுக்குக் கடுக மோக்ஷமுண்டாகக் காணா நின்றோம். ஆதலால் விலம்பரஹித மோக்ஷஹேதுக்களான ஸுக்ருத விசேஷங்கள் ஆர்பக்கலிலே கிடக்குமென்றும் தெரியாது. விலம்ப ஹேதுவான நிக்ரஹத்துக்குக் காரணங்களான துஷ்கர்மவிசேஷங்களும் ஆர்பக்கலிலே கிடக்குமென்றுந்தெரியாது.

விளக்கம் – கர்மயோகத்தில் ஈடுபட்டவனுக்கு அந்த முயற்சி வீணாவதில்லை என்பதை ஸ்ரீமத் பகவத் கீதை (2–40) – நேஹாபிக்ரம நாசோ அஸ்தி – என்று கூறியது காண்க. அந்தக் கர்மயோகமானது கல்லால் கட்டப்பட்ட சுவர் போன்று என்றும் நிலையாக இருக்கும். அதன் பலன் – இந்தக் கல்பத்தின் முடிவிலா, மன்வந்தரத்தின் முடிவிலா, யுகத்தின் முடிவிலா அல்லது ஜன்மத்தின் முடிவிலா – என எப்போது கிட்டும் என்று யாராலும் தெளிவாகக் கூற இயலாது. பகவான் உகப்படையும் செயல்கள் பல செய்த வசிஷ்டர் முதலானோர் கூட, பல காலம் காத்திருக்கும்படி ஆனது. ஆனால், பகவானை விரோதித்த வ்ருத்ராஸுரன், க்ஷத்ரபந்து முதலானோர் மிகவும் எளிதாக, தாமதம் இன்றி மோக்ஷம் சென்றனர். ஆக மோக்ஷம் இட்டுச் செல்லக்கூடிய விசேஷமான கர்மங்களை யார் இயற்றினர் என்று கூற இயலாது. இது போன்று, மோக்ஷம் தாமதிக்கும்படியான செயல்கள் யார் செய்தனர் என்றும் கூற இயலாது.

## மோக்ஷத் தடைக்கு சரணாகதியே வழி

இப்படி அநிஷ்ட பரம்பரைக்கு மூலங்களான அஜ்ஞாதிலங்கனங்களாலே வந்த பகவத் நிக்ரஹ விசேஷமாகிற ப்ரதான விரோதிக்குச் செய்யும் பரிஹாரத்தை – தஸ்ய ச வசீகரணம் தச்சரணாகதிரேவ – என்று கடவல்லியில் வசீகார்த்த பரம்பரையை வகுத்த இடத்திலே ஸ்ரீபாஷ்யக்காரர் அருளிச்செய்தார்.

விளக்கம் – மோக்ஷம் அடைவதற்குத் தடையாக உள்ளவற்றில் முதன்மையாக உள்ளது பகவானின் ஆணைகளை மீறுவதால், அவன் அளிக்கும் தண்டனைகளே ஆகும். இதுவே சங்கிலி போன்றுள்ள தொடர்ச்சியான துன்பங்களின் அடிப்படைக் காரணமாகிறது. இதனை விலக்குவது எப்படி? இதனை பகவத் ராமானுஜர் கூறுகையில் – இந்தத் துன்பங்கள் நீங்க, எம்பெருமானை வசப்படுத்துவதே ஆகும், அதற்கான வழி, அவனைச் சரணாகதி அடைவதே ஆகும் – என்று மிகவும் தெளிவாகக் கூறினார். இதனை அவர், கட உபனிஷத்தில் புலன்கள், மனம் போன்றவற்றை அடக்கும் வரிசை கூறும் இடத்தை விளக்கும்போது கூறுகிறார்.

## மோக்ஷத் தடைகள் பற்றி ரஹஸ்யத்ரயத்தில் எங்கு உள்ளது

இவ்விரோதி வர்க்கத்தையெல்லாம் ரஹஸ்யத்ரயத்தில் விதிக்கிற அர்த்தங்களுடைய வ்யவச்சேத சக்தியாலும் நமஸ்ஸுக்களில் மகாரங்களில் ஷஷ்டிகளாலும், ஸர்வபாப சப்தத்தாலும் அநுஸந்தித்து ஸம்ஸாரத்தில் அடிச்சூட்டாலே பேற்றுக்குறுப்பான வழிகளிலே த்வரிக்க ப்ராப்தம்.

விளக்கம் – இவ்விதம் மோக்ஷத் தடைக்கான விரோதிகள் பற்றி ரஹஸ்யத்ரயத்தில் மறைமுகமாகக் கூறப்படும் கருத்துக்கள் கொண்டு எளிதாக உணரலாம். இதனை நம என்பதில் உள்ள மமகாரம் (நான், எனது) மூலமாகவும், சரமச்லோகத்தில் உள்ள ஸர்வபாபம் என்ற பதம் மூலமும் அறியலாம். இதனை இவ்விதம் அறிவதன் மூலம் ஒருவன் – நாம் ஸம்ஸாரம் என்ற மிகுந்த சூடான மணலில் நடந்தபடி உள்ளோம், மிகவும் விரைவாக இதனைக் கடந்து, மகிழ்வு அளிக்கக் கூடிய பாதையை அடைய வேண்டும் – என்று உணர்வான்.

பொருள் ஒன்று என நின்ற பூமகள்நாதன் அவனடி சேர்ந்து
அருள் ஒன்றும் அன்பன் அவன் கொள் உபாயம் அமைந்த பயன்
மருள் ஒன்றிய வினைவல் விலங்கு என்று இவை ஐந்து அறிவார்
இருள் ஒன்று இலாவகை என் மனம் தேற இயம்பினரே.

பொருள் – பரம்பொருள் இவன் மட்டுமே என்று உள்ளவனும், தாமரையில் உள்ள மஹாலக்ஷ்மியின் நாதனும் ஆகிய எம்பெருமான், என்றும் எம்பெருமானை விரும்பி, அவனது திருவடிகளைச் சரணம் என்று பற்றி அவன் அருளை விரும்பி நிற்கின்ற ஜீவன், இவ்விதம் எம்பெருமானை அடைய விரும்பும் ஜீவன் கைக்கொள்ள வேண்டிய உபாயம், எம்பெருமானை அடைந்த பின்னர் பெறும் பலன், எம்பெருமானை அடைவதற்குத் தடையாக உள்ள அறியாமை போன்ற வலிய வினைப்பயன்கள் – இப்படிப்பட்ட ஐந்து விஷயங்களையும், அனைத்தும் அறிந்த ஆசார்யர்கள், சிறிதும் ஐயம் இல்லாதபடி, நமது மனதில் இவை பற்றிய ஐயம் நீங்கும்விதமாக உபதேஸித்தனர்.

ப்ராப்யம் ப்ரஹ்ம ஸமஸ்த சேஷி பரமம் ப்ராப்தா அஹம் அஸ்ய உசித:
ப்ராப்தி: தாய தன க்ரமாத் இஹ மம ப்ராப்தா ஸ்வத: ஸூரிவத்
ஹந்த ஏநாம் அதிவ்ருத்தவாந் அஹம் அஹமத்யா விபத்யாச்ரய:
ஸேது: ஸம்ப்ரதி சேஷிதம்பதி பரந்யாஸஸ்து மே சிஷ்யதே

பொருள் – நான் அடையவேண்டிய இலக்கு எதுவென்றால், மிகவும் உயர்ந்ததாகவும், அனைத்திற்கும் எஜமானனாகவும் உள்ள பரம்பொருளே ஆகும். அவனைச் சென்று அடையவேண்டிய நான், அவ்விதம் அடைவதற்கு ஏற்றவனே ஆவேன். தந்தையின் செல்வம் எவ்விதம் பிள்ளைக்கு வருகிறதோ அது போன்று, நித்யஸூரிகளுக்குக் கிட்டிய அந்த இலக்கு எனக்கும் தானாகவே கிட்டியிருக்கவேண்டும். அந்தோ. என்னுடைய அஹங்காரத்தாலும், அதனால் ஏற்பட்ட அறியாமையாலும் நான் அந்த இலக்கை இழந்து நிற்கிறேன். ஆனால் அனைவருக்கும் சேஷிகளான திவ்யதம்பதிகளிடம் சரணாகதி செய்யும்போது, அந்த இலக்கு கிட்டிவிடும், ஆக சரணாகதி அந்த இலக்கை அடைவதற்கான உபாயமாக உள்ளது என்று தெரிந்துகொண்டேன்.

## அர்த்தபஞ்சக அதிகாரம் முற்றிற்று

தூப்புல் பிள்ளை திருவடிகளே சரணம்

.........தொடரும்

ஶ்ரீ:
ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

ஶ்ரீ ரங்கநாயகி ஸமேத ஶ்ரீ ரங்கநாத பரப்ரஹ்மணே நம:
ஶ்ரீ பிள்ளை லோகாசார்யர் திருவடிகளே சரணம்
ஶ்ரீ மணவாள மாமுனிகள் திருவடிகளே சரணம்

ஶ்ரீ பிள்ளை லோகாசார்யர் அருளிச் செய்த

# முமுக்ஷுப்படி

## ஶ்ரீ மணவாள மாமுனிகள் அருளிச் செய்த வ்யாக்யானம்
## (பகுதி – 6)

25. வாசகத்திற்காட்டில் வாச்யத்திலே ஊன்றுகைக்கடி, ஈச்வரனே உபாயோபேயமென்று நினைத்திருக்கை.

அவதாரிகை – வாசகசக்தி ஸர்வத்தையும் ஸாதித்துக்கொடுக்கவற்றாயிருக்க. இதினுடைய வாச்யத்திலே இவர்களூன்றுகைக்கு ஹேதுவேதென்ன அருளிச்செய்கிறார், வாசகத்திற்காட்டில் என்று தொடங்கி.

விளக்கம் – அடுத்து ஒரு சந்தேகம் எழலாம். இந்த மந்த்ரத்தை உச்சரித்தாலே அனைத்தையும் கிட்டச்செய்துவிடும். அப்படி இருக்க, இந்த மந்த்ரத்தின் மூலம் கூறப்படும் பொருளான ஈச்வரனை ஆசார்யர்கள் அண்டி நிற்கக் காரணம் என்ன? இதற்கான விடையை அருளிச் செய்கிறார்.

வ்யாக்யானம் – அதாவது, ஸர்வபலத்துக்கும் ஸ்வயம் ஸாதநமாயும், ஸாதநாந்தரங்களுக்கும் ஸஹகாரியாய் நின்று தலைக் கட்டிக்கொடுத்தும் போருகிற இதினுடைய வாசகசக்தி தானே அமைந்திருக்கச்செய்தே, அதிலுங்காட்டில் கீழ்ச் சொன்னபடியே, இம்மந்த்ரத்தினுடைய வாச்யத்திலே பூர்வாசார்யர்கள் ஊன்றுகைக்கடி, உபேயாந்தரபரராய், இத்தை ஸாதனமாகக்கொண்டு ஸாதித்தல். உபாயாந்தரபரராய் இத்தை ஸஹகாரியாகக்கொள்ளுதல் செய்யுமவர்களைப் போலன்றிக்கே, உபாயோபேயங்களிரண்டும் ஈச்வரனேயென்று ப்ரதிபத்தி பண்ணியிருக்கையென்றபடி.

விளக்கம் – இந்த மந்த்ரமானது அனைத்து பலன்களையும் அளிக்கவல்ல சாதனமாக தானே நின்றும், மற்ற சாதனங்களுக்குத் துணையாக நின்றும் உதவுகிறது. ஆயினும், இந்த மந்த்ரத்தை விட, இந்த மந்த்ரத்தின் மூலம் உணர்த்தப்படும் (பரம்)பொருளிலேயே ஆசார்யர்கள் ஆழ்ந்து நின்றனர். இதன் காரணம் – அனைத்திற்கும் உபாயமாகவும், அந்த உபாயத்தின் மூலம் அடையப்படும் இடமாகவும் (உபேயம்) ஈச்வரனே உள்ளான் என்று உறுதியுடன் இருந்தனர். ஆக மற்ற பலன்களை விரும்புபவர்கள் போன்று அல்லாமலும், திருமந்த்ரத்தை மற்ற பலன்களுக்கு ஒரு சாதனமாகக் கொள்பவர்கள் போன்று அல்லாமலும், திருமந்த்ரத்தைத் துணையாகக் கொண்ட மற்ற சாதனங்களைச் சார்ந்து உள்ளவர்கள் போன்று அல்லாமலும் நம்முடைய ஆசார்யர்கள் விளங்கினர்.

ஆக, திருமந்திரத்தினுடைய சீர்மைக்குப் போரும்படி என்று தொடங்கி, இவ்வளவும் வாய்வந்தபடி அநுசந்திக்கவொண்ணாதபடியான இதனுடைய கௌரவத்தையும், ஈச்வரன் தானே சிஷ்யனுமாய், ஆசார்யனுமாய் நின்று வெளியிட்டருளுகையால் வந்த ஏற்றத்தையும், ஸகலசாஸ்த்ரங்களிலும், ஸகலமந்த்ரங்களிலும், வாச்யந்தன்னுலுங்காட்டில் இதுக்குண்டான பெருமையையும், அக்ரமமாகச் சொல்லிலும் தன்கார்யம் செய்யும் ஆதிக்யத்தையும், அபேக்ஷித ஸகலபலப்ரதத்வ ரூபமாஹாத்யத்தையும், கர்மாத்யுபாயஸஹகாரித்வரூபமான உத்கர்ஷத்தையும், ஜ்ஞாதவ்யஸகலார்த்தப்ரதிபாதகதயா வந்த மாஹாத்ம்யத்தையும், ஏதத்ப்ரதிபாத்ய அர்த்தகௌரவ விசேஷத்தையும் அருளிச் செய்கையாலே இம்மந்த்ரத்தினுடைய வைபவத்தை எல்லோரும் அறியும்படி தர்சிப்பித்தருளினாராயிற்று.

விளக்கம் – மூன்றாம் சூர்ணை தொடங்கி, இதுவரை கீழே உள்ள பெருமைகள் கூறப்பட்டன:

- வாய்க்கு வந்தபடி உரைக்க முடியாதவாறு திருமந்த்ரம் மதிப்பு உடையது.
- ஈச்வரன் தானே சிஷ்யனும் ஆசார்யனுமாய் நின்று வெளியிட்ட ஏற்றம் உள்ளது.
- அனைத்து சாஸ்த்ரங்களைக் காட்டிலும், தன்னால் கூறப்படும் எம்பெருமானைக் காட்டிலும் பெருமை உள்ளது.
- சரியான முறையில் கூறாவிட்டாலும், தனது பலனை அளிக்கவல்ல சிறப்புடையது.
- கர்மயோகம் போன்ற உபாயங்களுக்குத் துணையாக நிற்கும் மேன்மை உடையது.
- முமுக்ஷுவால் அறியப்பட வேண்டிய அர்த்தங்கள் அனைத்தையும் அறிய வைக்கும் சிறப்புடையது.
- தன்னால் கூறப்படும் தனித்தன்மை வாய்ந்த அர்த்தத்தை வெளிப்படுத்தும் வல்லமை உடையது.

26. இது தன்னில் சொல்லுகிற அர்த்தம் – ஸ்வரூபமும் ஸ்வரூபானுரூபமான ப்ராப்யமும், ஸ்வரூபமும் உபாயமும் பலமுமென்னவுமாம்.

அவதாரிகை – இனிமேல், இம்மந்த்ரத்துக்கு வாக்யார்த்தம் இரண்டுபடியாக அருளிச்செய்கிறார், இது தன்னில் என்று தொடங்கி.

விளக்கம் – அடுத்து திருமந்த்ரத்திற்கு இரண்டு விதமாக வாக்கியப் பொருள் கூறுகிறார்.

வ்யாக்யானம் – அதாவது, இம்மந்த்ரந்தன்னில் சொல்லுகிற அர்த்தம் – இவ்வாத்மாவினுடைய சேஷத்வ பாரதந்த்யங்களாகிற ஸ்வரூபமும், அந்த ஸ்வரூபானுரூபமாயிருந்துள்ள கைங்கர்யமாகிற ப்ராப்யமும், அன்றிக்கே, சேஷத்வமாகிற ஸ்வரூபமும், அந்த ஸ்வரூபானுரூபமான உபாயமும், உபாயலப்யமான பலமும் என்று சொல்லவுமாமென்கை. இதில் ப்ரதமயோஜநையில் ப்ரணவ நமஸ்ஸுக்களாலே ஸ்வரூபமும், நாராயண பதத்தாலே ப்ராப்யமும் சொல்லுகிறது. அநந்தரயோஜநையில், ப்ரணவத்தாலே சேஷத்வமும், நமஸ்ஸாலே உபாயமும், நாராயண பதத்தாலே பலமும் சொல்லுகிறது.

விளக்கம் – இந்த மந்த்ரம் உணர்த்தும் பொருள் – ஜீவனின் ஸ்வரூபம் பரமாத்மாவிற்கு அடிபணிந்து உள்ளதையும் (சேஷத்வம்), அவனை முழுவதுமாகச் சார்ந்து உள்ளதையும் (பாரதந்த்ர்யம்), இந்த ஸ்வரூபத்திற்கு ஏற்ற குறிக்கோளான (ப்ராப்யம்) கைங்கர்யம் – என்பவையாகும். அல்லது, திருமந்த்ரம் இவ்விதமாகவும் பொருள் கூறுவதாகக் கொள்ளலாம் – ஜீவனின் ஸ்வரூபம் எம்பெருமானுக்கு அடிமையாக இருந்தல், இத்தகைய ஸ்வரூபத்திற்கு ஏற்ற உபாயம், இந்த உபாயத்தின் மூலம் அடையப்படும் பலன் – என்பதைக் கூறுவதாகவும் கொள்ளலாம். இதில் முதலாவதாகக் கூறப்பட்ட விளக்கத்தில், ப்ரணவத்தின் மூலம் ஜீவனின் சேஷத்வ ஸ்வரூபமும், நம என்பதன் மூலம் ஜீவனின் பாரதந்த்ரிய ஸ்வரூபமும், நாராயண என்ற பதத்தின் மூலம் கைங்கர்யம் என்ற இலக்கும் (ப்ராப்யம்) கூறப்பட்டது. இரண்டாவதாகக் கூறப்பட்ட விளக்கத்தில், ப்ரணவத்தில் மூலம் ஜீவனின் அடிமைத்தனமும், நம என்பதன் மூலம் உபாயமும், நாராயண என்பதன் மூலம் பலனும் கூறப்பட்டது.

27. பலமிருக்கும்படி ப்ரமேயசேகரத்திலும் அர்ச்சிராதிகதியிலும் சொன்னோம்.

அவதாரிகை – பலவேஷந்தானிருக்கும்படி எங்ஙனே? என்ன அருளிச்செய்கிறார், பலமிருக்கும்படி என்று தொடங்கி.

விளக்கம் – இதன் பலன் எத்தகையது என்று விளக்குகிறார்.

வ்யாக்யானம் – அதாவது, இவ்வாத்மாவுக்கு ப்ராப்யமான பலந்தான், அர்ச்சிராதிமார்க்கத்தாலே பரமபதத்திலே போய் பரிபூர்ண பகவதனுபவத்தைப் பண்ணி, அவ்வனுபவ ஜனித ப்ரீதிப்ரேரிதனாய்க்கொண்டு பண்ணும் அசேஷசேஷ வ்ருத்தியாகையாலே, அதிருக்கும்படியை ஸங்க்ரஹேண ப்ரமேயசேகரமாகிற ப்ரபந்தத்திலும், விஸ்தரேண அர்ச்சிராதி கதியாகிற ப்ரபந்தத்திலும் விசதமாகச் சொன்னோம், அவற்றிலே கண்டுகொள்வதென்கை.

விளக்கம் – ஜீவனின் பலன் என்பது அர்ச்சிராதி மார்க்கமாக பரமபதத்திற்கு சென்று, அங்கு எம்பெருமானைப் பரிபூர்ணமாக அனுபவிப்பதும், அந்த அனுபவம் காரணமாக உண்டாகும் மகிழ்ச்சியால் அவனுக்குக் கைங்கர்யம் செய்தபடி இருத்தலும் – என்பதை நாம் (பிள்ளை லோகாசார்யார்) செய்த ப்ரமேயசேகரம் என்னும் நூலில் சுருக்கமாகவும், அர்ச்சிராதி என்னும் நூலில் விவிவாகவும் கூறினோம். அவற்றில் கண்டு கொள்க.

28. இதுதான் எட்டுத் திருவக்ஷரமாய் மூன்று பதமாயிருக்கும்.

அவதாரிகை – இனி இம்மந்த்ரத்துக்கு ப்ரதிபதம் அர்த்தம் அருளிச் செய்வதாகத் திருவுள்ளம்பற்றி, ப்ரதமம் இதினுடைய அக்ஷரஸங்க்யையையும், பதஸங்க்யையையும் அருளிச்செய்கிறார், இதுதான் என்று தொடங்கி.

விளக்கம் – அடுத்து, திருமந்த்ரத்தின் ஒவ்வொரு பதத்திற்கும் விளக்கம் அருளிச்செய்யத் திருவுள்ளம் கொண்டார். முதலாவதாக, திருமந்திரத்தில் எத்தனை எழுத்துக்கள் (அக்ஷரம்) என்பதையும், எத்தனை பதங்கள் என்பதையும் விளக்குகிறார்.

வ்யாக்யானம் – அதாவது, இம்மந்த்ரந்தான் ஓமித்யேகாக்ஷரம், நம இதி த்வே அக்ஷரே, நாராயணாயேதி பஞ்சாக்ஷராணி, இத்யஷ்டாக்ஷரம் சந்தஸா காயத்ரீசேதி, ஓமித்யக்ரே வ்யாஹரேத் நம இதி பச்சாத் நாராயணாயேத்யுபரிஷ்டாத் என்கிறபடியே எட்டுத்திருவக்ஷரமாய், மூன்று பதமாயிருக்குமென்கை. இதனுடைய அஷ்டாக்ஷரத்வம் சொல்லுகிறவிடத்திலே, ஓமித்யேகாக்ஷரம் என்று ப்ரணவத்தை ஓரக்ஷரமாகவும், நம இதி த்வே அக்ஷரே என்று நமஸ்ஸை இரண்டக்ஷரமாகவும், நாராயணாயேதி பஞ்சாக்ஷராணி என்று நாராயண பதத்தை அஞ்சக்ஷரமாகவும் ச்ருதி சொல்லுகையாலே, ஸமஸ்தபதமான நாராயண பதத்தில் நாரபதத்தைப் பிரித்து ஷடக்ஷரமாக்கி, ப்ரணவத்தையொழிய அஷ்டாக்ஷரத்வம் சொல்லுமவர்களுடைய பக்ஷம் அவைதிகமாகையாலே அநாதரணீயமாகக்கடவது.

விளக்கம் – இந்த மந்த்ரம் கீழே உள்ள வரிகளின்படி எட்டு எழுத்துக்கள் உடையதாக இருக்கிறது, மூன்று பதங்கள் கொண்டதாக இருக்கிறது:

- மஹா நாராயண உபநிஷத் – ஓமித்யேகாக்ஷரம், நம இதி த்வே அக்ஷரே, நாராயணாயேதி பஞ்சாக்ஷராணி, இத்யஷ்டாக்ஷரம் சந்தஸா காயத்ரீசேதி – ஓம் என்பது ஓர் எழுத்து, நம: என்பது இரண்டு எழுத்து, நாராயணாய என்பது ஐந்து எழுத்து. ஆக இந்த மந்த்ரம் எட்டு எழுத்து உடையதாக, காயத்ரீ சந்தஸில் அமைந்தது.

- மஹா நாராயண உபநிஷத் – ஓமித்யக்ரே வ்யாஹரேத் நம இதி பச்சாத் நாராயணாயேத்யுபரிஷ்டாத் – முதலில் ஓம் என்று சொல்ல வேண்டும், அடுத்து நம: என்று சொல்ல வேண்டும், தொடர்ந்து நாராயணாய என்று கூற வேண்டும்.

இந்த மந்த்ரம் எட்டு எழுத்து கொண்டது என்று கூறும்போது, ஓம் என்ற ப்ரணவத்தை ஓர் எழுத்தாகவும், நம என்பதை இரண்டு எழுத்தாகவும், நாரயணாய என்பதை ஐந்து எழுத்தாகவும் ச்ருதி கூறியது. ஆனால், ஒரு சிலர், பரிபூர்ணமாக உள்ள நாராயண என்ற பதத்தை நார + அயன என்று பிரித்து, நாராயணாய என்பது ஆறு எழுத்து கொண்டது என்று கொள்கின்றனர். இவர்கள், இவ்விதமாகக் கொள்ளும்போது, ஓம் என்ற ப்ரணவத்தை நீக்கிவிடுகின்றனர். இந்தக் கருத்து, வேதங்களுடன் முரண்படுவதால் ஏற்பதற்கில்லை.

29. மூன்று பதமும் மூன்று அர்த்தத்தைச் சொல்லுகிறது.

அவதாரிகை – இதில் பதத்ரயமும் எவ்வர்த்தத்தைச் சொல்லுகிறது? என்னும் ஆகாங்க்ஷயிலே, மூன்று பதமும் மூன்றர்த்தத்தைச் சொல்லுகிறது என்கிறார்.

விளக்கம் – இந்த மந்த்ரத்தில் உள்ள மூன்று பதங்களும் எத்தனை பொருள்களை (அர்த்தங்களை) உணர்த்துகின்றன என்ற சந்தேகம் எழலாம். இதற்கு விடை அருளிச் செய்கிறார். அவை மூன்றும் தனித்தனியாக, மூன்று அர்த்தங்களைக் கூறுகின்றன என்றார்.

30. அதாவது – சேஷத்வமும், பாரதந்த்யமும், கைங்கர்யமும்.

அவதாரிகை – அவ்வர்த்தங்கள் தம்மை விசதமாக அருளிச்செய்கிறார். அதாவது – சேஷத்வமும், பாரதந்த்யமும், கைங்கர்யமும் என்று.

வ்யாக்யானம் – ஸ்வரூபமும் ஸ்வரூபானுரூபமான ப்ராப்யமும் என்று முதற்சொன்ன வாக்யார்த்தம் இத்தை நினைத்திறே.

விளக்கம் – இந்த மந்த்ரத்தின் பொருளானது, ஜீவன் எம்பெருமானுக்கு வசப்பட்டவனாக உள்ளதையும் (சேஷத்வம்), அவனை முழுவதுமாகச் சார்ந்து உள்ளதையும், இவை மூலம் கிட்டும் கைங்கர்யமும் ஆகும். இதனை நாம் 26–ஆம் சூர்ணையில் கண்டோம்.

31. இதில் முதற்பதம் ப்ரணவம்.

அவதாரிகை – இப்பதத்ரயத்திலும் ப்ரதமபதந்தான் எது? என்ன, இதில் முதல் பதம் ப்ரணவம் என்கிறார்.

விளக்கம் – திருமந்த்ரத்தில் உள்ள மூன்று பதங்களில், முதல் பதம் எது என்ற கேள்விக்கு விடை அருளிச் செய்கிறார்.

வ்யாக்யானம் – ஓமித்யக்ரே வ்யாஹரேத் என்றிறே ச்ருதி சொல்லிற்று. ஸ்ம்ருதியும் ப்ரணவாத்யம் நமோமத்யம் நாராயணபதாந்திமம் மந்த்ரமஷ்டாக்ஷரம் வித்யாத் ஸர்வஸித்திகரம் ந்ருணாம் என்றதிறே.

விளக்கம் – ச்ருதியான மஹா நாராயண உபநிஷத் – ஓம் இதி அக்ரே வ்யாஹரேத் – ஓம் என்பதை முதலில் கூறவேண்டும் – என்று கூறியது. ஸ்ம்ருதியில் – ப்ரணவாத்யம் நமோமத்யம் நாராயணபதாந்திமம் மந்த்ரமஷ்டாக்ஷரம் வித்யாத் ஸர்வஸித்திகரம் ந்ருணாம் – ஓம் என்பதை முதலிலும், நம: என்பதை நடுவிலும், நாராயண என்பதை இறுதியிலும் கொள்ளவேண்டும், இப்படியாக உள்ள எட்டு எழுத்து மந்த்ரம், மனிதர்களுக்கு அனைத்தையும் அளிக்கவல்லது – என்று கூறியது.

32. இது அ என்றும், உ என்றும், ம என்றும் மூன்று திருவக்ஷரம்.

அவதாரிகை – இனி ப்ரணவத்துக்கு அர்த்தம் அருளிச்செய்வதாக இதனுடைய அக்ஷரத்ரயாத்மகதையை அருளிச்செய்கிறார், இது அ என்றும், உ என்றும், ம என்றும் மூன்று திருவக்ஷரம் என்று.

விளக்கம் – அடுத்து ப்ரணவத்தின் பொருளை அருளிச்செய்ய திருவுள்ளம் கொண்டார். அதற்கு முதலில், ப்ரணவம் மூன்று எழுத்துக்களை உள்ளடக்கியது, என்று அருளிச்செய்கிறார்.

வ்யாக்யானம் – இப்ரணவந்தான், அஸம்ஹிதாகாரத்தாலே மூன்றக்ஷரமாய், மூன்றுபதமாய். மூன்றர்த்த ப்ரகாசகமாய், ஸம்ஹிதாகாரத்தாலே ஏகாக்ஷரமாய், ஏகபதமாய், ஏகார்த்தப்ரகாசகமாயிறே இருப்பது.

விளக்கம் – இந்தப் ப்ரணவம் பிரிக்கப்படும்போது மூன்று எழுத்துக்களும், மூன்று பதங்களும், மூன்று பொருள்களும் வெளிப்படுகின்றன. சேர்த்துப் படிக்கும்போது ஓர் எழுத்தாக உள்ளது.

33. மூன்று தாழியிலே தயிரை நிறைத்துக் கடைந்து வெண்ணைய் திரட்டினாற்போலே மூன்று வேதத்திலும் மூன்று அக்ஷரத்தையும் எடுத்தது.

அவதாரிகை – இந்த அக்ஷரத்ரயத்தினுடையவும் உத்பத்திக்ரமத்தை ஸத்ருஷ்டாந்தமாக அருளிச்செய்கிறார், மூன்று தாழியிலே என்று தொடங்கி.

விளக்கம் – ப்ரணவத்தில் உள்ள மூன்று எழுத்துக்கள் உண்டான விதத்தை, ஓர் உதாரணம் மூலம் அருளிச்செய்தார்.

வ்யாக்யானம் – பூரிதி ருக்வேதாதஜாயத புவ இதி யஜுர்வேதாத் ஸுவரிதி ஸாமவேதாத் தாநி ஸுக்ராண்யப்யதபத் தேப்யோ அபிதப்தேப்யஸ் த்ரயோ வர்ணா அஜாயந்த அகார உகார மகார இதி தாநேகதா ஸமபரத்ததேததோமிதி என்றும், அகாரஞ் சாப்யுகாரஞ்ச மகாரஞ்ச ப்ரஜாபதி: வேத த்ரயாந் நிரப்ருஹத் பூர்புவஸ் ஸ்வரிதீதி ச என்றும் ச்ருதி ஸ்ம்ருதிகளிற் சொல்லுகிறபடியே ருக்யஜுஸ்ஸாமரூபமான வேதத்ரயத்தில் நின்றும், பூ: புவ: ஸுவ: என்கிற வ்யாஹ்ருதித்ரயத்தையும் தோற்றுவித்து அந்த வ்யாஹ்ருதி த்ரயத்தையும் பொன்னோட வைக்குமாபோலே தன் ஸங்கல்பத்தாலே ஓட வைத்து, அவற்றில் நின்றும் அகார உகார மகாரங்களாகிற அக்ஷரங்கள் மூன்றும், அடைவே தோன்றும்படி பண்ணி, இப்படி ஸர்வேச்வரன் ஸமுத்தரித்தபடியைத் திருவுள்ளம்பற்றி பாத்ரத்ரயகதமான தயிரைத் தனித்தனியே கடைந்து, தத்ஸாரமான வெண்ணெயை வாங்கித் திரட்டினாற்போலே (மூன்று வேதத்திலும் மூன்றக்ஷரத்தையும் எடுத்தது) என்கிறார்.

விளக்கம் –

- அதர்வவேதம் – பூரிதி ருக்வேதாதஜாயத புவ இதி யஜுர்வேதாத் ஸுவரிதி ஸாமவேதாத் தாநி ஸுக்ராண்யப்யதபத் தேப்யோ அபிதப்தேப்யஸ் த்ரயோ வர்ணா அஜாயந்த அகார உகார மகார இதி தாநேகதா ஸமபரத்ததேததோமிதி – பூ: என்பது ருக் வேதத்தில் இருந்து வந்தது, புவ: என்பது யஜுர் வேதத்தில் இருந்து வந்தது, ஸுவ: என்பது ஸாமவேதத்தில் இருந்து வந்தது. இப்படியாக வந்த தூய்மையான இவற்றை உருக்கியபோது, மூன்று எழுத்துக்கள் தோன்றின. அவை – அ, உ, ம – என்பதாகும். இவை ஒன்று சேர்க்கப்பட்டபோது, ஓம் என்பது உண்டானது.

- மனு ஸ்ம்ருதி – அகாரஞ் சாப்யுகாரஞ்ச மகாரஞ்ச ப்ரஜாபதி: வேத த்ரயாந் நிரப்ருஹத் பூர்புவஸ் ஸ்வரிதீதி ச – மூன்று வேதங்களில் இருந்து ப்ரஜாபதியானவன், அ–உ–ம என்பதையும், பூ:–புவ:–ஸுவ: என்பதையும் எடுத்தான்.

இப்படியாக ஸ்ம்ருதி, ச்ருதி வரிகளில் கூறப்பட்டபடி ப்ரஜாபதி, பூ:–புவ:–ஸுவ: என்ற மூன்று பதங்களை எடுத்தான். தங்கத்தைத் தூய்மைப்படுத்த, அதனை உருக்குவது போன்று, இந்த மூன்று எழுத்துக்களையும் தனது ஸங்கல்பத்தால் உருக்கினான். அவற்றில் இருந்து, அ–உ–ம என்ற எழுத்துக்கள் தோன்றும்படிச் செய்தான். இப்படியாக ஸர்வேச்வரன் மூன்று வேதங்களையும் கடைந்து, முன்று எழுத்துக்களை எடுத்ததை விவரிக்க பிள்ளை லோகாசாரியார் திருவுள்ளம் கொண்டார். ஆகவே அவர், பானைகளில் உள்ள தயிரைத் தனித்தனியே கடைந்து, அவற்றில் இருந்து எடுக்கப்பட்ட வெண்ணையை ஒன்றாக வைப்பது போன்று என அருளிச்செய்தார்.

34. ஆகையால் இது ஸகலவேத ஸாரம்.

அவதாரிகை – இத்தால் பலித்ததத்தை அருளிச்செய்கிறார், ஆகையால் இது ஸகல வேதஸாரம் என்று.

விளக்கம் – கடந்த சூர்ணையின் மூலம் கிட்டும் பொருளை விளக்குகிறார்.

வ்யாக்யானம் – அதாவது, அக்ஷரத்ரயமும் ஓரோ வேதத்திநுடைய ஸாரமாக ஸமுத்த்ருதமாகையாலே இவ்வக்ஷரத்ரயாத்மகமான ப்ரணவம் ஸகலவேத ஸாரம் – என்றபடி.

ஆக – இது தன்னிற்சொல்லுகிற அர்த்தம் – என்று தொடங்கி இவ்வளவும் – இம்மந்த்ரத்திநுடைய வாக்யார்த்தத்தையும், அக்ஷர ஸங்க்யையையும், பதஸங்க்யையையும், பதத்ரயமும், அர்த்தத்ரய ப்ரதிபாதகமென்னுமத்தையும், அதில் ப்ரதமபதம் இன்னதென்னுமத்தையும், அதுதான் அக்ஷரத்ரயாத்மகமாய் இருக்குமென்னுமத்தையும், அவ்வக்ஷரத்ரயமும் வேதத்ரயஸாரமாக உத்பந்நமாகையாலே தத் ஸமுதாயமான ப்ரணவம் ஸகலவேதஸாரமென்னுமத்தையும் அருளிச்செய்தாராயிற்று.

விளக்கம் – இந்த மூன்று எழுத்துக்களும், மூன்று வேதங்களின் ஸாரமாக வந்த மூன்று பதங்களிலிருந்து எடுக்கப்பட்டது. ஆகவே, இந்த மூன்று எழுத்துக்களும் சேர்ந்த ப்ரணவமானது, அனைத்து வேதங்களின் ஸாரமாக உள்ளது எனலாம். ஆக – இது தன்னில் சொல்லுகிற அர்த்தம் – என்னும் 26–ஆம் சூர்ணை தொடங்கி, இதுவரை, பின்வரும் விஷயங்கள் கூறப்பட்டன:

- திருமந்த்ரத்தில் உள்ள எழுத்துக்களின் எண்ணிக்கை.
- திருமந்த்ரத்தில் உள்ள பதங்களின் எண்ணிக்கை.
- மூன்று பதங்களும், மூன்று பொருளை உணர்த்துகின்றன.
- முதல் பதம் எது?
- முதல் பதம் மூன்று எழுத்துக்கள் கொண்டது.
- முதல் பதத்தில் உள்ள மூன்று எழுத்துக்களும், மூன்று வேதங்களின் ஸாரமாக உள்ளதால், அந்த எழுத்துக்கள் சேர்ந்த ப்ரணவம் என்பது அனைத்து வேதங்களின் ஸாரம் எனப்பட்டது.

ஸ்ரீ பிள்ளை லோகாசார்யர் திருவடிகளே சரணம்

ஸ்ரீ மணவாள மாமுனிகள் திருவடிகளே சரணம்

.. .. தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீ ரங்கநாயகி சமேத ஸ்ரீ ரங்கநாத பரப்ரஹ்மணே நம:

திருமங்கை ஆழ்வார் அருளிச் செய்த

# சிறிய திருமடல்

## (பகுதி – 6)

(ஆரால் இவ்வையம் அடியளப்புண்டதுதான்) – பூமிப்பரப்பைத் தன் காற்கீழ் இட்டுக்கொண்டவர் ஆர்? ஆரால் என்கையாலே ஈபாவஞ்செய்து அருளாலளிப்பாரார் என்றால், அவன் என்ன வேண்டும் ப்ரஸித்தியை உபஜீவித்து நின்று சொல்லுகிறாள். (இவ்வையம்) மண்ணையிருந்து துழாவி வாமனன் மண்ணிதுவென்னும் பூமிப்பரப்பையடையத் துழாவியிருந்து, அவன் அடிச்சுவடு மோந்தவரைப்போலே சொல்லும். விச்வாமித்ரமஹர்ஷி யாகம் காக்கப் பெருமாள் எழுந்தருளுகிறபோது – ருஷியே. இங்கே தோற்றுகிற ஆச்ரமம் ஏது? – என்று கேட்டருள, ஸ்ரீவாமனன் எழுந்தருளியிருந்து தபஸ்ஸ் பண்ணின ஸித்தாச்ரமம், அவன் எழுந்தருளியிருந்து போன இடம் என்று நான் இம்மண்ணை மோந்துகொடு கிடப்பன் – என்றானிறே. அப்படியே இவ்வையமென்று அடிச்சுவடு தோன்றுகிறபடி. (ஆரால் இவ்வையம் அடியளப்புண்டது தான்) – இத்தால் புவனியெல்லாம் நீரேற்றளந்த நெடிய பிரான் அருளாவிடுமே என்னுமாபோலே தன்னுடைமையை இரந்து பெறுமவனன்றோ? இவளை விட்டுவைக்குமோ? என்றபடி. மண்ணை இரந்து அளந்து கொள்ளுமவன் பெண்ணை நோவுபட விட்டு வைக்குமோ? என்றபடி.

விளக்கம் – (ஆரால் இவ்வையம் அடியளப்புண்டதுதான்) – இந்தப் பூமி முழுவதையும் தனது திருவடிகளின் கீழ் வைத்தவன் யார்? ஆரால் என்ற பதத்தை ஏன் உபயோகித்தாள்? திருவாய்மொழி (2–2–2) – ஈ பாவம் செய்தருளால் அளிப்பார் ஆர் – என்ற கேள்வி கேட்கும்போது, அவனே என்று பதிலளிக்கும் விதமாக, ஆரால் என்று கேட்டாள். (இவ்வையம்) – திருவாய்மொழி (4–4–1) – மண்ணையிருந்து துழாவி வாமனன் மண்ணிதுவென்னும் – என்று கூறியது போன்று, இவள் பூமிப்பரப்பு முழுவதும் ஆராய்ந்து, முகர்ந்து பார்த்து, இந்த மண் வாமனனின் திருவடிகள் பட்ட மண் என்று மண்ணின் வாசனை மூலம் கூறுவாள். விச்வாமித்ரரின் யாகத்தைக் காக்க இராமன் வந்தபோது, அங்கு இருந்த ஓர் ஆச்ரமத்தைக் கண்டான். அவன் விச்வாமித்ரரிடம் – முனிவரே, இங்கு உள்ள ஆச்ரமம் யாருடையது – என்றான். அதற்கு விச்வாமித்ரர் இராமனிடம் – இந்த இடம் வாமனன் எழுந்தருளி இருந்து தவம் செய்த இடமாகும், அவன் இங்கு இருந்தான் என்ற காரணத்தினால் நான் இந்த மண்ணின் வாசத்தையே சுவாசம் செய்தபடி இங்கேயே உள்ளேன் – என்றார். ஆழ்வார் போன்றும், விச்வாமித்ரர் போன்றும் இவள் அவனது திருவடித் தடத்தை அறிந்தவளாகக் கூறுகிறாள். (ஆரால் இவ்வையம் அடியளப்புண்டதுதான்) – திருவிருத்தத்தில் (69) – புவனியெல்லாம் நீரேற்றளந்த நெடிய பிரான் அருளாவிடுமே – என்று கூறியது போன்று, இவன் தனக்கு உரிமையாக உள்ள பொருள் எதுவாக இருந்தாலும் யாசித்துப் பெற்றுக் கொள்வான் அல்லவோ? அப்படிப்பட்ட இவன், தனக்கு மிகவும் உரிமையான பரகாலநாயகியை விடுவானோ? மண்ணையே அளந்து பெற்றவன், அதனை விட உயர்ந்த பெண்ணைத் தவிக்க விடுவானோ?

(ஆரால் இலங்கை பொடிபொடியா வீழ்ந்தது) – வரபலபுஜபலங்களாலே மிக்க இலங்கை யாராலே துகளாயிற்று? (ஆரால்) – தங்கள் தரமறியாதே வரத்தைக் கொடுத்து அவனாலே குடியிருப்பிழந்து கழுத்தும் கப்படமுமாய்க் கூப்பிட்டுத் திரிந்த ப்ரஹ்மாதிகளாலேயோ? புதுக்கும்பிடாகையாலே செய்வதறியாதே செய்தபடி. இத்தால், ஒருத்திக்காக உண்ணாதுறங்காது ஒலிகடலையூடறுத்து இப்படி அரியனசெய்து கைக்கொள்ளுமவன் இவளை நோவுபட்டிருக்க விடான் என்றபடி. (மற்றாராலே கல்மாரி காத்ததுதான்) – பசிக்கோபத்தாலே இந்த்ரன் வர்ஷிக்க, அவ்வர்ஷம் நோக்கப்பட்டது ஆராலே? அவ்வர்ஷத்திலே அகப்பட்ட இடையராலும் பசுக்களாலுமோ? இத்தால் தன்னால் வந்த நலிவும் தானே பரிஹரிக்கும் என்றபடி.

விளக்கம் – (ஆரால் இலங்கை பொடிபொடியா வீழ்ந்தது) – அதிகமான வரங்கள் மூலம் பெற்ற பலம், புஜங்களின் பலம் ஆகியவை நிறைந்த இலங்கை பொடிப்பொடியானது யாரால்? (ஆரால்) – இராவணன் ப்ரம்மன் முதலான தேவர்களிடம் பல வரங்கள் கேட்டான். இவனுக்கு வரங்கள் அளித்தால், அந்த வரங்கள் கொண்டு நம்மையே தாக்கினால் நம்மால் சமாளிக்க இயலுமா என்று தங்களது வலிமை குறித்து ஆராயாமல், அவனுக்கு வரங்கள் அளித்தனர். தன் பின்னர், அந்த இராவணனாலேயே தங்கள் இருப்பிடம் இழந்து, கழுத்து அறுபடாமல் தப்பித்து, கட்டியிருந்த ஆடையுடன் எம்பெருமானைத் தேடி அலைந்தனர். இப்படிப்பட்ட ப்ரம்மன் முதலான தேவர்கள் மூலமாகவா இலங்கை அழிந்தது? புதியதாகத் தன்னைக் கும்பிடுபவர்களைக் கண்டு மதிமயங்கி உதவுபவர்கள் போன்று தேவர்கள் செய்தனர், அதன் பின்னர் என்ன செய்வது என்று அறியாமல் திகைத்தனர். இப்படியாக, நாச்சியார் திருமொழி (11–7) கூறுவது போன்று – உண்ணாது உறங்காது ஒலி கடலை ஊடறுத்து – என்றபடி, ஒரு பெண்ணிற்காக இத்தனை பாடுபட்டவன், இவளைத் தவிக்க விடமாட்டான் என்று கருத்து. (மற்றாராலே கல்மாரி காத்ததுதான்) – தன்னுடைய உணவு பறிக்கப்பட்டதால் உண்டான பசிக்கோபம் காரணமாக இந்த்ரன் கல்மழை பிழிந்தான். அந்த மழையிலிருந்து அனைவரையும் காப்பாற்றியது யார்? அந்த மழையில் அகப்பட்டுத் தவித்தபடி நின்ற இடையர்களும் பசுக்களுமா தங்களைத் தாங்களே காப்பாற்றிக்கொண்டன? ஆக, தன்னால் ஒருவருக்கு ஏற்படும் துன்பத்தைத் தானே வந்து துடைப்பான் என்று கருத்து (க்ருஷ்ணன் இந்த்ரனுக்கு பூஜை செய்யவேண்டாம் என்று தடுத்ததால் அல்லவா இந்தத் துன்பம் ஏற்பட்டது? தன்னால் வந்த துன்பத்தைத் தானே கோவர்த்தன மலையை எடுத்துக் காத்தான் என்று கருத்து).

(ஆழிநீர் ஆரால் கடைந்திடப்பட்டது) – அப்ரமேயோ மஹோததி: ஒருவராலும் பரிச்சேதிக்க ஒண்ணாதபடி பேராழத்தையுடைத்தாயிருக்கிற ஸமுத்ரத்தைக் கடைந்து, கடைந்து கலக்குறுத்து உடலுட்புகுந்து நின்றூறலறுத்தவர் என்கிறபடியே அதில் நற்சீவனான அம்ருதத்தைக் கொண்டார் ஆர்? கடலைக் கடையவென்று உபக்ரமித்துக் கை வாங்கின தேவர்களாலும் அஸுரர்களாலுமன்றிறே. அன்று தேவரசுரர் வாங்க இத்யாதியிறே. தேவர்களும் அஸுரர்களும் கைவாங்கின பின்பிறே கடலைக் கடையப்புக்கது. இத்தால் பல வடிவைக் கொண்டு உடம்பு நோவ ப்ரயோஜநாந்தர பரர்க்குமகப்படக் கார்யம் செய்யுமவன், அமுதில் வரும் பெண்ணமுதை நோவுபட வைக்குமோ என்றபடி. விண்ணவர் அமுதுண அமுதில் வரும் பெண்ணமுதுண்டவனிறே.

விளக்கம் – (ஆழிநீர் ஆரால் கடைந்திடப்பட்டது) – இராமாயணம் கூறுவது போன்று – அப்ரமேயோ மஹோததி: – ஆழம் காண இயலாத ஸமுத்ரம் – என்னும்படி, யாராலும் ஆழம் காண இயலாதபடி உள்ள கடலைக் கடைந்தது யார்? நாச்சியார் திருமொழி (10–9) கூறுவது போன்று – கடைந்து கலக்குறுத்து உடலுள் புகுந்து நின்று ஊறலறுத்தவர் – என்னும்படி உடல் என்ற கடலில் புகுந்து அதில் உள்ள ஜீவன் என்னும் அமிர்தத்தைத் தேடிக்கொண்டவன் யார்? கடலைக் கடையவேண்டும் என்று தொடங்கிய பின்னர், அது இயலாமல் நின்ற தேவர்களும் அசுரர்களுமா கடலைக் கடைந்தனர்? நம்மாழ்வார் திருவாய்மொழியில் (7–1–7) – அன்று தேவர் அசுரர் வாங்க – என்றது போன்று, அவர்கள் கை விட்டபின்னர் அல்லவோ இவன் கடலைக் கடைய வந்தான்? இப்படியாகத் தன்னைப் பெற முயற்சிக்காமல் அமிர்தம் பெறுவதில் குறியாக இருந்த தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் உதவ, பல வடிவங்கள் எடுத்துத் தன்னை வருத்திக் கொண்டான். அப்படி உள்ள இவன், பெரியதிருமொழி (6–1–2) கூறுவது போன்று – அமுதில் வரும் பெண் அமுதை – மஹாலக்ஷ்மி போன்ற பரகாலநாயகியைக் கைவிடுவானோ? பெரியதிருமொழி (6–1–2) – விண்ணவர் அமுதுண அமுதில் வரும் பெண்ணமுதுண்டவன் – அல்லவோ இவன்?

(அவன்காண்மின்) – இவ்வபதானங்களெல்லாம் செய்தவனுக்கு உங்கள் மகள் நோவுபடுமித்தனையல்லது வேறு தேவதாந்தரங்களுக்கு நோவுபடுமோ? (ஊராநிரை மேய்த்து) – தங்களுக்குப் பசுக்கள் அளவு பட்டு ஊராநிரை மேய்க்கிறானன்றிறே. உங்கள்தம் ஆநிரையெல்லாம் வந்து புகுதரும்போது என்று கண்ணெச்சிலாம்படியிறே இவர்கள் கோஸம்ருத்தியிருப்பது. அப்படியிருக்கச் செய்தேயும், கோரக்ஷணத்திலே அந்வயித்தவனாகையாலே ஊராநிரை மேய்க்கும். ஒருவன் ஒரு ரக்ஷணத்திலே உத்யுக்தனானால் ரக்ஷ்யவர்க்கம் பெற்றதில் பர்யாப்தனாகானிறே. அப்படியே ஊராநிரையையெல்லாம் மேய்க்கும்.

விளக்கம் – (அவன் காண்மின்) – அவனது வீட்டில் பசுக்கள் குறைவு என்பதால் அடுத்தவர்களின் பசுக்களையும் மேய்க்கிறான் என்று கூற முடியாது. காரணம், பெரியதிருமொழி (10–4–8) கூறுவது போன்று – உங்கள்தம் ஆநிரையெல்லாம் வந்து புகுதருபோது – என்னும்படி, காண்பவர்கள் கண் வைக்கும்படியாக அல்லவா நந்தகோபரின் வீட்டில் பசுக்கள் இருந்தன? ஆயினும் பசுக்களைக் காப்பதற்காகவே பிறந்தவனாகையால், ஊரிலுள்ள அனைத்துப் பசுக்களை மேய்த்தான் என்று கருத்து. ஒருவன் காக்கும் செயலில் சிறந்தவன் என்றால் தன்னால் காக்கப்படும் பொருள்கள் எத்தனை பெற்றாலும், மனம் நிறைவு கொள்ளாமல் இருப்பது போன்று, இவன் ஊரில் உள்ள அனைத்துப் பசுக்களையும் மேய்த்தான்.

(உலகெல்லாமுண்டுமிழ்ந்தும்) – ப்ரளயத்தில் அகப்பட்ட லோகங்களையெல்லாம் திருவயிற்றிலே நோவுபடாமே வைத்து, அங்கே நெருக்குண்ணாதபடி வெளிநாடு காண் உமிழ்ந்தும், ஊராநிரை மேய்த்து உலகெல்லாமுண்டுமிழ்ந்தும் என்று ஊராநிரை மேய்த்தத்தோடு உலகெல்லாமுண்டுமிழ்ந்தத்தோடு வாசியின்றியே இருக்கிறது காணும் இவர்க்கு. (ஆராத தன்மையனாய்) – ரக்ஷ்யவர்க்கத்தையெல்லாம் ரக்ஷித்தாலும், தான் ஒன்றும் செய்யாதானாயிருக்கிறபடி. அதாவது – தன்னை விச்வஸித்து உடன் கிடந்தவனை மடிதடவினவன் நெஞ்சாறல் படுமாபோலேயாயிற்று, ரக்ஷ்யவர்க்கத்தை நோவுபடக்கொடுத்து நோக்குகையாவது என்னென்புது என்று அவன் புண்பட்டிருக்கும்படி. ஸ்ரீதண்டகாரண்யத்தில் ருஷிகள் ராக்ஷஸராலே நோவுபட்ட சரீரங்களை ஏஹி பஸ்ய சரீராணி என்று காட்டி அந்யாயப்பட, ஒரு ரக்ஷகனுளன் என்று சொல்லிப் பட்ட நோவால் வந்த லஜ்ஜையிறே உங்களுக்கு, கர்ப்ப பூதாஸ் தபோதநா: என்று உங்கள் கையிலே உங்களை ரக்ஷித்துக் கொள்ளும் கைம்முதலுண்டாயிருக்கச் செய்தே, கர்ப்பபூதரைப்போலே உங்களுடைய ரக்ஷணத்துக்கு நீங்கள் கடவி கோளன்றியிலே இருக்கிற உங்களுக்கு வந்த லஜ்ஜை ஸஹிக்கலாம், நோவுபடுவிகோளும் நீங்களேயாய், வந்து அறிவிப்புதிகோளும் நீங்களேயாம்படி பிற்பாடரானோமென்பதாய்க்கொண்டு லஜ்ஜை நம்மால் பொறுக்கவொண்ணாது – என்றானிறே. அப்படியே இங்கு ஆராத தன்மையனாய். (அங்கு) – ரக்ஷணமில்லாத தேசத்திலே பிறக்கும் பரிமாற்றம். (ஒருநாள்) – காலக்ருத பரிணாமமுள்ள தேசத்திலே பிறந்தபடி கேட்கலாகாதோ? (ஆய்ப்பாடி) – பரமபதம்போலே காணும் திருவாய்பாடியும். அவர்களுக்கு ஜன்மவ்ருத்தமில்லாதாற்போலே இவர்களுக்கும் ஜந்மவ்ருத்தமில்லாதபடி. (சீரார்கலையல்குல்) – யசோதைப் பிராட்டி சாத்தின பரியட்டத்துக்கு ஸம்பத்து எங்ஙனே வந்ததென்னில், பிள்ளை சீறாமைக்காக அழுக்குக்கழித்து ஒப்பித்திருக்கும், இவனுடைய பற்றுமஞ்சளும் கண்ணும் மையுமாயிருக்குமலங்காரம். அல்குலுக்குச் சீர்மையாவது – எடுத்துக்கொள்ளில் மருங்கையிறுத்தியுடும் – என்கிறபடியே க்ருஷ்ணனையெடுத்து ஒசிந்த இடை. முற்காலத்திலே பெரியதிருநாள் ஸேவித்த முதலிகள் – திருநாள் ஸேவித்த இரட்டை – என்று மேலைத்திருநாள் வருமளவும் அவ்விரட்டையை மடித்துக் கொடியிலேயிட்டுவைத்துப் பார்த்துப் பார்த்துக் கொண்டிருப்பார்கள். (சீரடி) – மடியிலேயிருந்து இவன் தீம்பு செய்தால் தள்ளுமிறேயிழிய, தள்ளினால் இவன் கட்டிக்கொள்ளும் கால், அரிசினத்தால் ஈன்ற தாய் அகற்றிடினும் மற்றவள் தன் அருள் நினைந்தே அழுங்குழவி என்னக்கடவதிறே. (செந்துவர்வாய்) – காலைக் கட்டி கொண்டவாறே இவள் உதறுமே, உதற உதற இவன் கட்டிக்கொள்ளுமிறே, கட்டிக்கொண்டவாறே ஸ்மிதம் பண்ணும் வாய். (வாரார் வனமுலையாள்) – ஸ்மிதம் பண்ணினவாறே கோபம் மாறினாளென்று முலையிலே அபேக்ஷ பண்ணுமிறே. பசல்கள் அலையாமைக்கு ஔஷதம் இட்டுவைப்பாரைப்போலே கச்சையிட்டு ஆர்த்துவைக்குமிறே, வல்லையாகில் விடுத்துக்கொள்ளுகாண் என்னும் முலை.

விளக்கம் – (உலகு எல்லாம் உண்டு உமிழ்ந்து) – ப்ரளயத்தின் போது துன்பத்தில் அகப்பட்ட உலகங்கள் அனைத்தையும் தனது வயிற்றில் துன்பம் நெருங்காமல் வைத்துக் கொண்டான். அவை நீண்டகாலம் தனது வயிற்றில் நெருக்கிக் கொண்டு இருப்பதைப் பார்த்து பொறுக்க முடியாமல், வெளியில் உமிழ்ந்தான். இங்கு, மாடுகளை மேய்ப்பதும், உலகத்தை வயிற்றுக்குள் வைத்து உமிழ்வதும் ஒரே போன்று, சுலபமான செயலாக வேறுபாடு இல்லாமல் கட்டுவிச்சிக்கு உள்ளது என்று கருத்து. (ஆராத தன்மையனாய்) – காப்பாற்றப் படவேண்டிய அனைத்தையும் காப்பாற்றிய பின்னரும், தான் ஏதும் செய்யவில்லை என்று நினைத்தபடி உள்ளான். அவன் தனது மனதில் – என்னை முழுவதுமாக நம்பிய ஜீவன்களை, ப்ரளயகாலத்தில் துன்பப்படவைத்துவிட்டு, காலம் கடந்து காப்பாற்றியதில் என்ன

பெருமை உள்ளது – என்று மனம் புண்பட்டபடி இருப்பவன் ஆவான். தன்னையே நம்பி, தனது மடியில் உறங்கும் ஒருவனது மடியில் உள்ள பொருளைக் களவு செய்தவன், பின்னர் எப்படித் துடிப்பானோ அது போன்று இவன் துடிக்கிறான். தண்டகாரண்ய வனத்தில், அரக்கர்களால் துன்ப்பபட்ட உடல்களை முனிவர்கள் இராமனிடம் – ஏஹி பச்ய சரீராணி – எங்கள் உடம்புகளைக் காண்பாயாக – என்று முறையிட்டனர். இதனைக் கண்ட இராமன் அவர்களிடம் – நீங்கள் நம்மைக் காக்க ஒருவன் உள்ளான் என்று நம்பினீர்கள். அவன் வந்து காப்பாற்றாமல் துன்பப்பட்டபோது, உங்களது நிலை கண்டு வெட்கம் கொண்டீர்கள். கர்ப்ப பூதாஸ் தபோதநா: என்னும்படி கர்ப்பத்தைப் பத்திரமாகப் பாதுகாக்கும் தாய்போன்று உங்களைக் காப்பாற்றிக் கொள்ளும் வல்லமையாகிய தவம் என்ற வலிமை உங்களிடம் இருந்த்து. ஆயினும், உங்கள் ஸ்வரூபம் கருதி அவ்வாறு செய்யாமல் நின்று, பின்னர் துன்பம் அடைந்ததைக் கண்டு வெட்கம் கொண்டீர்கள். அந்த வெட்கத்தையும் நீங்கள் பொறுத்துக் கொண்டீர்கள். ஆனால், நீங்கள் என்னிடம் வந்து, நீங்கள் அடைந்த துன்பத்தை நீங்களே சொல்லுவதைக் கேட்டு எனக்கு உண்டாகும் வெட்கம் பொறுக்க இயலாமல் உள்ளது – என்றான். இவ்விதம் பொறுத்துக் கொள்ள இயலாதவனாக எங்கு இருந்தான்? (ஆங்கு) – ஆபத்து வரும் காலங்களில் வந்து காப்பாற்ற வேண்டிய அவசியம் இல்லாத இடத்தில் இருந்து கொண்டு. (ஒருநாள்) – மாற்றங்கள் பல அடையும் இந்த உலகில் இவன் அவதரித்துச் செய்த செயல்களைக் கேளுங்கள். (ஆய்ப்பாடி) – ஆய்ப்பாடியும் பரமபதம் போன்றது எனக் கூறலாம். எப்படி? நித்யஸூரிகளுக்கு பிறப்பால் உண்டாகும் ஏற்ற தாழ்வுகள் இல்லை என்பது போன்று, ஆய்ப்பாடியில் உள்ளவர்களுக்கும் ஆகும். (சீரார்க்கலையல்குல்) – யசோதையின் ஆடைகளுக்கு ஏற்றமென்ன? கண்ணனின் திருமேனியில் பூசப்படும் மஞ்சள், அவன் கண்களில் தீட்டப்படும் மை ஆகியவை இவள் புடவையில் ஒட்டிக் கொண்டிருப்பதே ஏற்றமாகும். அவையே இவளது ஆடைக்கு அலங்காரம் போன்றுள்ளது. தான் அழுக்காக ஆடை அணிந்தால் கண்ணன் கோபித்துக் கொள்வான் என்று தனது புடவையில் உள்ள அழுக்கை நீக்கிக் கொள்வாள், ஆனால் சிறிது நேரத்திலேயே மீண்டும் அவற்றைக் கண்ணன் அழுக்கேற்றிவிடுவான். இடுப்புக்கு உள்ள மேன்மை என்ன? பெரியாழ்வார் திருமொழியில் (1–2–9) கூறப்பட்டது போன்று – எடுத்துக்கொள்ளில் மருங்கை இறுத்திடும் – என்னும்படி, கண்ணனை எடுத்து அமர்த்திக் கொள்வதற்கு ஏற்றபடி இருப்பதே யசோதையின் இடுப்புக்கு உள்ள மேன்மையாகும். முற்காலத்தில், பெரியதிருநாள் ஸேவித்த பெரியவர்கள், அந்தத் திருநாளிற்குக் கட்டிக் கொண்டு போன ஆடைகளை – இவை திருநாள் கண்ட ஆடைகள் – என்று பத்திரமாக மடித்து வைத்து, அவற்றை அவ்வப்போது கண்டு வணங்கியபடி இருப்பர். இது போன்றே யசோதையின் ஆடைகளும் இருந்தன. (சீரடி) – யசோதையின் திருவடிகளும் மேன்மை பெற்றவை. எப்படி? தனது மடியில் கண்ணனை வைத்துள்ளபோது, அவன் ஏதேனும் வம்பு செய்வான், அப்போது யசோதை கோபம் கொண்டு அவனைத் தரையில் விட்டுவிடுவாள், உடனே கண்ணன் அழுதபடி இவள் கால்களைக் கட்டிக் கொள்வான், அப்படிப்பட்ட மேன்மை உடையது யசோதையின் திருவடிகள். பெருமாள் திருமொழி (5–1) – அரிசினத்தால் ஈன்ற தாய் அகற்றிடினும் மற்றவள் தன் அருள் நினைந்தே அழும் குழவி – என்றது காண்க. (செந்துவர்வாய்) – கண்ணன் யசோதையின் கால்களைக் கட்டிக்கொள்ள, அவள் உதறுவாள். இவ்விதம் அவள் உதற உதற இவன் மேலும் இறுக்கமாகக் கட்டிக் கொள்வான். இதனைக் கண்டு அவள் தனது அழகான வாய் திறந்து சிரிப்பாள். (வாரார் வனமுலையாள்) – யசோதை சிரிப்பதைக் கண்ட கண்ணன், இவளுக்குக் கோபம் நீங்கி விட்டது என்று எண்ணி, தாய்ப்பால் பருக விருப்பம் கொள்வான். குழந்தைகள் அதிகமாக உண்ணக்கூடாது என்பதற்காக, இனிப்பில் சிறிது மருந்து கலந்து வைப்பது போன்று, இவள் தனது ஸ்தனங்களைக் கச்சை கொண்டு கட்டி வைத்திருப்பாள். அவளது ஸ்தனங்கள் கண்ணனிடம் – முடிந்தால் அவிழ்த்துக் கொள்வாய் – என்னும்படி இருக்கும்.

திருமங்கை ஆழ்வார் திருவடிகளே சரணம்

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்

.. .. தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

நம்பெருமாள் திருவடிகளே தஞ்சம்

திருப்பாணாழ்வார் திருவடிகளே சரணம்
பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்

## திருப்பாணாழ்வார் அருளிச் செய்த

# அமலனாதிபிரான்
(பகுதி – 6)

(அண்டமுற நிவர்ந்த நீண்முடியன்) – அண்டகடாஹத்திலே சென்று சேர்ந்த திருவபிஷேகத்தை உடையவன். அண்டகடாஹம் வெடித்து அடைகட்ட வேண்டும்படியிறே அபேக்ஷிதம் பெற்று வளர்ந்தபடி. (அண்டமுற) – அண்டம் மோழையெழ.

விளக்கம் – (அண்டமுற நிவர்ந்த நீண்முடியன்) – ப்ரம்மாண்டத்தின் எல்லைவரை சென்று விட்ட திருமுடியை உடையவன். உலகத்தை அளந்து மீண்டும் எடுத்துக் கொள்ளவேண்டும் என்ற தனது விருப்பம் நிறைவேறிய காரணத்தால் திருவாய்மொழி (7–4–1) – அண்டம் மோழையெழ – என்று கூறுவது போன்று, அண்டம் வெடித்து விடாது தடுக்கவேண்டும்படி அல்லவா இவன் உயர்ந்தான்.

(நிவர்ந்த) – நிமிர்ந்த பூவலர்ந்தாப்போலே. (நீண்முடியன்) – உபயவிபூதிக்கும் நிர்வாஹனென்று தோற்றும்படியிருக்கிற திருவபிஷேகத்தையுடையவன். ரக்ஷ்யவர்க்கத்தை நோக்கினாலிறே ரக்ஷகன் முடிதரிப்பது. (அன்றித்யாதி) – கண்ட காட்சியிலே ஜிதம் என்ன வேண்டும்படியிருக்குமவனிறே. எதிரிட்ட பையல்களை முடிக்கைக்கு வெவ்விய சரத்தையுடைய சக்ரவர்த்தித் திருமகன்.

விளக்கம் – (நிவர்ந்த) – அழகான மலர் மலர்ந்தது போன்று நிமிர்ந்த. (நீண்முடியன்) – நித்யவிபூதி, லீலாவிபூதி ஆகிய இரண்டின் சக்ரவர்த்தி இவனே என்று அறிவிக்கும் விதமாக நீண்ட க்ரீடம் உடையவன். தன்னால் காப்பாற்றப்பட வேண்டிய மக்களைக் காப்பாற்றினால் அல்லவோ ஓர் அரசனின் தலையில் அவன் மணிமுடி தங்கியிருக்கும்? (அன்று இத்யாதி) – இவனைக் கண்டவுடனேயே இவனது வெற்றி நிச்சயம் என்பதும், தங்கள் தோல்வி நிச்சயம் என்பதும் விரோதிகள் உணரும்படி உள்ளவன். எதிரே நின்ற அரக்கர்கள் அழியும்படி வெம்மையான அம்புகளை எய்த சக்ரவர்த்தித் திருமகன்.

(அன்று) – ரக்ஷகனானவன் ரக்ஷ்யத்தை நோக்கக்கடவதாக வந்து நின்றவன்று. (நேர்ந்த நிசாசரரை) – எதிரிட்ட நிசாசரரை. நேர்ந்த நிசாசரரை என்கிறது திருப்பல்லாண்டு பாடவேண்டும் அழகைக் கண்டும் எதிரம்பு கோப்பதே என்று. நிசாசரர் – வெளியில் முகங்கண்டறியாத பையல்கள். (கவர்ந்த) – புறப்படும்போது விநயத்தோடு புறப்பட்டு, வேட்டை நாய்கள் ஓடி மேல் விழுமாபோலே விழுகை. (வெங்கணை) – விடும்போது அம்பாய், படும்போது காலாக்நிபோலேயிருக்கை. தீப்த பாவக ஸங்காசை: சிதை: காஞ்சனபூஷணை: என்கிறபடியே பெருமாள் கண் பார்க்கிலும் முடித்தல்லது நில்லாத வெம்மை.

விளக்கம் – (அன்று) – தன்னால் காக்கப்படவேண்டிய மக்களுக்காக, காக்கவேண்டிய பொறுப்பு உடைய எம்பெருமான் இராமனாகத் அவதரித்த அன்று. (நேர்ந்த நிசாசரரை) – தனக்கு எதிரே நின்ற அரக்கர்களை. நேர்ந்த நிசாசரரை என்பதன் பொருள் என்ன? இராமனைக் கண்டவுடன் அவனது அழகில் மயங்கி அவனுக்குத் திருப்பல்லாண்டு பாட வேண்டியது இருக்க, அவன் முன்பாக நின்று அம்புகளை விடுகின்றனர் என்று கருத்து. நிசாசரர் என்றால் வெளிச்சம் நிறைந்த இடங்களில் நிற்க இயலாமல் இருளில் மட்டுமே உள்ள அரக்கர்கள் என்பதாகும். (கவர்ந்த) – இராமனின் வில்லிலிருந்து வெளிப்படும் அம்புகள், புறப்படும்போது

மிகவும் அடக்கமாப் புறப்படுகின்றன, ஆனால் அவை அசுரர்கள் மீது வேட்டைநாய்கள் போன்று பாய்கின்றன. (வெங்கணை) – இராமனின் வில்லிலிருந்து கிளம்பும்போது அம்புகளாக உள்ளவை, அசுரர்கள் மீது விழும்போது ப்ரளயகாலத்தின் நெருப்பு போன்று விழுகின்றன. இராமாயணம் – தீப்த பாவக ஸங்காசை: சிதை: காஞ்சனபூஷணை: – நெருப்பு போன்றவையும், கூர்மையானவையும், தங்கத்தால் செய்யப்பட்டவையும் – என்னும்படி அம்புகள் எவ்வளவு அழகாக இருந்தாலும், இராமன் இரக்கம் கொண்டு நின்றாலும், அந்த அம்புகள் எதிரிகளை அழிப்பதில் கருணை காட்டாத வெப்பம் உடையவை.

(காகுத்தன்) – குடிப்பிறப்பாலே தரம் பாராதே விஷயீகரித்தபடியும் வீரவாதியும்.

விளக்கம் – (காகுத்தன்) – ககுத்தன் என்ற சக்ரவர்த்தியின் குலத்தில் அவதரித்ததால் உயர்ந்தவர்கள்–தாழ்ந்தவர்கள் என்று பேதம் காணாமல், அனைவருக்கும் அருள் புரிந்த தன்மை.

(கடியார்பொழில்) – திருவுலகளந்தருளினவிடமே பிடித்து அடியொற்றி, ராவணவதம் பண்ணித் தெற்குத் திருவாசலாலே புகுந்து சாய்ந்தருளினான். இன்னமும் வேர்ப்படங்கிற்றில்லை, திருச்சோலையில் பரிமளம் விடாய்க்கு சிசிரோபசாரமானபடி. (அரங்கத்தம்மான்) – அவதாரத்துக்குப் பிற்பாடர்க்கும் இழவு தீரக் கோயிலிலே வந்து கண்வளர்ந்தருளுகிறபடி. (அம்மான்) – இங்கே வந்த பின்பு ஈச்வரத்வம் நிலைநிற்கை.

விளக்கம் – (கடியார்ப்பொழில்) – திருவுலகம் அளந்து என்று கூறி விட்டு, அதனைத் தொடர்ந்து காகுத்தன் என்று இராமனைக் கூறினார். இதன் மூலம், உலகம் அளந்த களைப்பு நீங்குவதற்காகவும், இராவணனை வதம் செய்த களைப்பு நீங்குவதற்காகவும், இராமன் தெற்கு வாசல் மூலமாகப் பெரியகோயிலுக்கு வந்து, நறுமணம் வீசும்படியான திருவரங்கத்தில் சயனித்துள்ளான் என்று கருத்து. இவனுக்கு இன்னமும் களைப்பால் வந்த வியர்வை அடங்கவில்லை. திருவரங்கத்தைச் சூழ்ந்துள்ள சோலைகள் இவனுக்கு குளிரூட்டி, களைப்பு நீங்கும் விதமாக உள்ளன. (அரங்கத்தம்மான்) – தனது அவதார காலத்தில் இல்லாமல், பின்னர் பிறந்தவர்களுக்கு எந்தக் குறையும் நேராமல் இருக்க, திருவரங்கத்தில் சயனித்தான் என்று கருத்து. (அம்மான்) – திருவரங்கத்திற்கு வந்த பின்னரே அவனே ஈச்வரன் என்ற தகுதி நிலையானது.

(அரைச்சிவந்தவாடை) – உடையார்ந்தவாடை, செக்கர்மாமுகில், திருமேனிக்குப் ப்ரபாகமான திருப்பீதாம்பரம். (சிவந்தவாடையின் மேல் சென்றதாம்) – சோற்றின்மேலே எனக்கு மனம் சென்றது என்னுமாபோலே ஆச்சர்யப்படுகிறார். (எனசிந்தனை) ஆருடைய கூறையுடையைக் கண்டு உகக்கக் கடவ நெஞ்சு இதிலேயகப்பட்டது. (எனசிந்தனை) – திருவடிகளின் சுவடறிந்த பின்பு புறம்பு போகமாட்டாத நெஞ்சு. தீர்த்தமாடா நிற்கத் துறையிலே பிள்ளையைப் கெடுத்துத் திருவோலக்கத்திலே காண்பாரைப்போலே திருவடிகளில் நின்றும் திருப் பீதாம்பரத்திலே திருவுள்ளத்தைக் கண்டபடி.

விளக்கம் – (அரைச்சிவந்தவாடை) – நம்மாழ்வார் திருவாய்மொழியில் (3–7–4) – உடையார்ந்தவாடை – என்றும், திருவாசிரியத்தில் – செக்கர்மாமுகில் – என்றும் அருளிச்செய்தபடி, அவனுடைய கறுத்த திருமேனிக்கு ஏற்ற நிறம் கொண்டதாக உள்ள திருப்பீதாம்பரம் என்றார். (சிவந்தவாடையின் மேல் சென்றதாம்) – மிகுந்த பசியுள்ள ஒருவனுக்கு உணவின்மீது மட்டுமே கண்கள் செல்வது போன்று, எனது மனம் அவனது ஆடையின்மீது சென்றது என வியப்படைகிறார். (எனசிந்தனை) – பெண்களின் ஆடைகளைக் கண்டு மட்டுமே இன்பம் அடைந்தபடி இருந்த எனது மனம், இப்போது இவனது ஆடையில் சிக்குண்டது. (எனசிந்தனை) – கடந்த பாசுரத்தில் அவன் திருவடிகளைக் கண்ட எனது மனம் வேறொன்றிலும் செல்லாது என்றோம், இப்போது அவன் ஆடையைக் கண்டு கலங்கியது என்றார். நதியில் நீராடிய பின்னர் தன்னுடன் வந்த குழந்தையைக் காணாமல், அக்குழந்தை மற்றொரு கூட்டத்தில் இருப்பதைக் காணுவது போன்று – தனது மனம் அழகிய மணவாளனின் திருவடிகளில் காணாமல் போய்விட, இப்போது அதனை ஆடையில் கண்டெடுக்கிறார்.

3. மந்தி பாய் வடவேங்கட மாமலை வானவர்கள்
சந்தி செய்ய நின்றான் அரங்கத்து அரவின் அணையான்
அந்தி போல் நிறத்து ஆடையும் அதன்மேல் அயனைப் படைத்தது ஓர் எழில்
உந்தி மேலது அன்றோ அடியேன் உள்ளத்து இன் உயிரே.

பொருள் – குரங்குகள் ஒரு கிளையிலிருந்து மற்றொரு கிளைக்குத் தாவியபடி உள்ள திருவேங்கடமலையில் நித்யசூரிகள் மலர்கள் தூவி வணங்க நிற்கிறான். இப்படிப்பட்ட அவன், திருவரங்கத்தில் ஆதிசேஷன் என்ற படுக்கையில் பெரியபெருமாளாகக் கண்வளர்கிறான். அவனது திருப்பீதாம்பர ஆடையானது அந்திப்பொழுதில் தோன்றும் சிவந்த வானம் போன்று உள்ளது. அந்த ஆடையின் மீது ப்ரம்மனைப் படைத்த அழகான தாமரைமலர் போன்ற நாபிக்கமலம் உள்ளது. இவற்றின் மீது எனது நல்மனம் நிலைபெற்று நின்றது.

அவதாரிகை – திருப்பீதாம்பரத்தின் அழகு திருநாபீ கமலத்திலே வீசிற்று.

விளக்கம் – அரங்கனின் பீதாம்பரத்தின் அழகானது இவரது மனதை அவனது நாபியின்மீது அடித்துத் தள்ளியது.

வ்யாக்யானம் – (மந்திபாய்) – திருமலையில் பலாக்கள் வேரே பிடித்துத் தலையளவும் பழுத்துக் கிடக்கையாலே அங்குத்தைக் குரங்குகள் ஜாத்யுசித சாபலத்தாலே ஒரு பழத்தை புஜிக்கப் புக மற்றை மேலில் பழத்திலே கண்ணையோட்டி இத்தை விட்டு அதிலே பாய்ந்து தாவா நிற்கும் அத்தனையாய்த்து. பெரியபெருமாளுடைய திவ்யாவயவங்களிலே தாம் ஆழங்கால் படுகிறாப் போலேயாய்த்து அவைகளும். கானமும் வானரமும் வேடுமுடை வேங்கடமிறே. (மந்திபாய்) – ஒன்றையொன்று பற்றி மாலையாக நாலாநிற்கும். திருச்சின்னக்குரல் கேட்டவாறே பாய்ந்தோடா நிற்குமென்றுமாம். பரமபதமும் திருமலையும் கோயிலும் திருவயோத்யையும் திருச்சோலையும் ஒரு போகியாயிருக்கிறபடி. எங்கும் மாறிமாறித் தங்குகை. (மந்திபாய்) – பலாக்கள் வேரோடு பணையோடு வாசியறப் பழுத்துக் கிடக்கையாலே ஒன்றிலே வாய் வைக்கப் பெறாதேதான் வேண்டினபடியே திரியும்படியாய்த்து.

விளக்கம் – திருமலையில் உள்ள பலா மரங்களில் வேர் தொடங்கி உச்சி வரை, மரம் முழுவதும் பலாப்பழங்கள் உள்ளன. அங்குள்ள குரங்குகள் அவற்றை உண்பதற்காக ஒரு மரத்திற்குத் தாவும். அப்போது மற்றொரு மரத்தில் உள்ள பலாப்பழம் கண்ணில்பட, இதனை விட்டு அதற்குத் தாவும். இதனை இங்கு கூறுகிறார். இவரது மனமானது பெரியபெருமாளின் திவ்யமான உறுப்புக்களில் ஈடுபடுவது இது போன்றே ஆனது என்று கருத்து – ஒரு உறுப்பு விட்டு மற்றொரு உறுப்புக்கு மனம் தாவுகிறது. இதனையே திருமழிசை ஆழ்வார் நான்முகன் திருவந்தாதியில் (47) – கானமும் வானரமும் வேடும் உடை வேங்கடம் – என்றார். (மந்திபாய்) – பெரியகோயிலின் மதிள்களில் குரங்குகள் ஒன்றை ஒன்று பற்றியபடி, காண்பதற்கு மாலை போன்று தொங்கும். நம்பெருமாளின் திருச்சின்ன ஒலி கேட்டவுடன் பாய்ந்து ஓடாநிற்கும். ஆழ்வாருக்கு பரமபதம், திருவரங்கம், திருமலை, அயோத்யா, திருமாலிருஞ்சோலை ஆகிய அனைத்தும் ஒரே போன்று உள்ளது. இவரது மனமானது குரங்கு போன்று இந்த க்ஷேத்ரங்களில் மாறிமாறிச் செல்கிறது என்று கருத்து. (மந்திபாய்) – திருமலையில் உள்ள பலா மரங்களில் வேர் தொடங்கி உச்சி வரை, மரம் முழுவதும் பலாப்பழங்கள் உள்ளன. அங்குள்ள குரங்குகள் அவற்றை உண்பதற்காக ஒரு மரத்திற்குத் தாவும். அப்போது மற்றொரு மரத்தில் உள்ள பலாப்பழம் கண்ணில்பட, இதனை விட்டு அதற்குத் தாவும்.

(வடவேங்கடம்) – தமிழ்தேசத்துக்கு எல்லை நிலம். போக்யதை அளவற்றிருக்கை. உபயவிபூதியும் ஒரு மூலையிலே அடங்குமென்றுமாம்.

விளக்கம் – (வடவேங்கடம்) – தமிழ்நாட்டின் எல்லையாக உள்ள இடம். எல்லையாக உள்ளதால் அளவற்ற இனிமையுடன் உள்ள தன்மை. இந்த மலையின் ஒரு சிறிய பகுதியிலேயே நித்யவிபூதியும், லீலாவிபூதியும் அடங்கிவிடும்.

(வானவர்கள் சந்தி செய்ய நின்றான்) – எத்தனையேனும் தண்ணியார்க்கும் முகங்கொடுத்து நிற்கிற இந்நீர்மையை அனுஸந்தித்து, நித்யஸூரிகள் வந்து படுகாடு கிடப்பது இங்கேயாய்த்து. மேன்மையை அனுபவிக்குமத்தனையிறே அங்கு.

சீலானுபவம் பண்ணலாவது இங்கேயிறே. நித்யஸூரிகள் திருமலையிலே நிற்கிற சீலவத்தையிலே ஈடுபட்டு வந்து ஆச்ரயிக்க, குருடர்க்கு வைத்த அறச்சாலையிலே விழிகண்ணர் புகுரலாமோவென்று, தான் ஆனைக்குப்பாடுவாரைப் போலே மந்திகள் பக்கலிலே திருவுள்ளத்தை வைத்தான் என்றுமாம்.

விளக்கம் – மிகவும் தாழ்ந்தவர்களும் தனது அழகான திருமுகத்தை மிகவும் எளிதாகக் காணும்படி திருமலையில் வந்து நின்றான். இந்த எளிமையை எண்ணி வியந்தபடி நித்யஸூரிகள் அன்றாடம் திருமலைக்கு வந்து ஈடுபட்டபடி நிற்பார்கள். பரமபதத்தில் இவனது மேன்மை மட்டுமே வெளிப்படு. ஆனால் திருமலையில் அல்லவா இவனது சீலம் வெளிப்படுகிறது? இவ்விதம் இவனது சீலத்தைக் கண்டு நித்யஸூரிகள் வந்து நின்றனர். இதனைக் கண்ட திருவேங்கடவன் – குருடர்களுக்காக உள்ள இடத்தில், கண் பார்வை உள்ளவர்கள் வந்து அனுபவிப்பது சரியா – என்று எண்ணினான். ஆகவே இவர்கள் பக்கம் திரும்பாமல், குரங்குகளின் பக்கம் தனது மனதை வைத்தான்.

(அரங்கத்தரவினணையான்) – அங்கு நின்றும் இங்கே சாய்ந்தபடி. பரமபதத்தினின்றும் அடியொற்றினான், திருமலையளவும் பயணமுண்டாயிருந்தது. அங்கு நின்றும் வடக்குத் திருவாசலாலே கோயிலிலே சாய்ந்தான். ராமாவதாரத்தே பிடித்து அடியொற்றினான். ராவணவதம் பண்ணித் தெற்குத் திருவாசலாலே வந்து சாய்ந்தவித்தனையாயிருந்ததென்றுமாம். (அரவினணையான்) – திரிகிறவன் சாய்ந்தருளினால் உள்ளவழகு. (அரவு) – நாற்றம், குளிர்த்தி, மென்மையும்.

விளக்கம் – (அரங்கத்தரவினணையான்) – திருமலையில் நின்றும், திருவரங்கத்தில் சயனித்தும் உள்ளான். பரமபதத்திலிருந்து புறப்பட்டான். திருமலைக்கு வந்து சேர்ந்தான். அங்கிருந்து புறப்பட்டு, வடக்கு வாசலாலே திருவரங்கப் பெரியகோயிலில் புகுந்து, இங்கு சயனித்தான். இராமாவதார காலத்திலேயே இங்கு வந்தான். இராவணனை வதம் செய்த பின்னர், தெற்கு வாசலாலே பெரியகோயிலில் புகுந்து, சயனித்தான். (அரவினணையான்) – எங்கும் சஞ்சாரம் செய்தபடி உள்ளவன் தனது களைப்பு நீங்க இங்கு வந்து சயனித்ததால் வந்த அழகு. (அரவு) – இனிய மணம், குளிர்ச்சி, மென்மை முதலான தன்மைகள் உடைய ஆதிசேஷன்.

(அரங்கத்தரவினணையான்) – சேஷ்யே புரஸ்தாச்சாலாயாம் ஸ்ரீபரதாழ்வானை வளைப்புக் கிடக்க விட்டுப்போந்து கடற்கரையிலே வளைப்புக் கிடந்தாற்போலே ஸம்ஸாரிகளைப் பெற்றாலல்லது போகேனென்று வளைப்புக் கிடக்கிறான். சக்ரவர்த்தித் திருமகனைப் போலே முதலில் சரணம்புக்கு முகங்காட்டாவிட்டவாறே – சாபமாநய – என்று சீறுமவரல்லர். ஆற்றாமையைக் காட்டிச் சரணம் புக்குக் கிடக்குமவரிறே இவர். (அந்திபோல் நிறத்தாடையும்) – ஸந்த்யாராகம் போலேயிருந்துள்ள திருப்பீதாம்பரமும், அரைச்சிவந்தவாடை என்றது பின்னாட்டுகிறபடி.

விளக்கம் – இராமாயணம் அயோத்யாகாண்டம் (114–14) – சேஷ்யே புரஸ்தாச்சாலாயாம் – இராமனை அயோத்திக்கு அழைத்துச் செல்லாமல் பர்ணசாலையை விட்டு அகலமாட்டேன் என்று பரதன் இருந்தான். ஆனால் இராமனோ கடலைக் கடப்பது என்று முடிவு செய்து கடற்கரையை விட்டு அகலவில்லை. இதேபோன்று ஸம்ஸாரிகள் தன்னை அடையாமல் தான் இங்கிருந்து கிளம்புவதில்லை என்று பெரியபெருமாள் சயனித்துள்ளான். ஆனால் இராமன் அழைத்த பின்னரும் ஸமுத்ரராஜன் வராமல் இருக்கவே, இராமன் கோபம் கொண்டு – சாபமாநய – இந்தக் கடலை வற்றச் செய்து விடுகிறேன் – என்றான். பெரியபெருமாளோ தன்னிடம் ஸம்ஸாரிகள் வராமல் இருந்தாலும், இராமன் போன்று கோபம் கொள்ளாமல் உள்ளான். (அந்திபோல் நிறத்தாடையும்) – மாலை நேரத்து வானம் போன்று சிவந்த திருப்பீதம்பரம். கடந்த பாசுரத்தில் கண்ட – அரைச்சிவந்த ஆடை – இன்னமும் தனது மனதை விட்டு நீங்காதபடி உள்ளதால் இங்கு மீண்டும் கூறினார்.

(அதன்மேல்) – இவ்வழகினின்றும் கால்வாங்க மாட்டிகிறிலர். (அயனித்யாதி) – சதுர்த்தசபுவந ஸ்ரஷ்டாவான ப்ரஹ்மாவுக்கு உத்பத்தி ஸ்தானமான திருநாபீ கமலத்தின் மேலதன்றோ. சதுர்முகஸ்ருஷ்டி பூர்வகாலத்திலேயாகிலும் இப்போது ப்ரஹ்மாவுக்கு உத்பத்தி ஸ்தாநமென்று கோள்சொல்லித்தாரா நின்றது,

திருநாபீகமலம் (எழிலுந்தி) – இளகிப்படிக்கை ப்ரஸவாந்தஞ்ச யௌவநம் என்கிறபடியன்றிக்கேயிருக்கை.

விளக்கம் – (அதன்மேல்) – ஆடையின் அழகிலிருந்து இவரால் மீள இயலாமல் உள்ளதால், அதனையே மீண்டும் கூறுகிறார். (அயனைப் படைத்தது ஓர்) – பதினான்கு உலகங்களையும் படைத்தவன் ப்ரம்மன். அவனுக்கும் உற்பத்தி இடமாக உள்ளது பெரியபெருமாளின் திருநாபீ. அதன் அழகில் மனம் நின்றது அல்லவோ. இந்த உந்தியானது ஸ்ருஷ்டி காலத்தில்தான் ப்ரம்மனைப் படைத்தது, ஆயினும் இப்போது காணும்போது, இதுவே ப்ரம்மனைப் படைத்த உந்தி என்ற சிந்தனை மேலோங்கும்படி உள்ளது. (எழிலுந்தி) – ப்ரஸவாந்தஞ்ச யௌவநம் – குழந்தை பிறந்தவுடன் யௌவநம் மறையும் – என்ற விதி பெரியபெருமாள் விஷயத்தில் பொருந்தாமல், ப்ரம்மனைப் படைத்த பின்னரும் அழகு குறையாமல் உள்ளது என்று கருத்து.

(அடியேன்) – பதிம் விச்வஸ்ய, யஸ்யாஸ்மி என்கிற ப்ரமாணத்தாலே அடியேன் என்கிறாரல்லர், அழகுக்குத் தோற்று அடியேன் என்கிறார். (அடியேனுள்ளத்தின்னுயிரே) – என்னுடைய நற்சீவனானது திருநாபீ கமலத்ததன்றோவென்கிறார். விடாமைக்குப் பற்றாக, மருடியேலும் விடேல் கண்டாய் என்னுமாபோலே. இப்பாட்டில் பெரியபெருமாள் பக்கலிலே திருவேங்கடமுடையான் தன்மையுமுண்டென்கிறது.

விளக்கம் – (அடியேன்) – பதிம் விச்வஸ்ய – உலகின் நாதனாக உள்ளவன், யஸ்யாஸ்மி – யாருக்கு நான் தாஸனோ – முதலான ப்ரமாணங்களை மனதில் கொண்டு இங்கு இவர் – அடியேன் – என்று கூறவில்லை. பெரியபெருமாளின் அழகில் தன்னை இழந்த காரணத்தினால் இவ்விதம் கூறுகிறார். (அடியேன் உள்ளத்து இன் உயிரே) – என்னுடைய சிறந்த ஆத்மஸ்வரூபம், இவனது அழகான திருநாபீக் கலமத்தில் ஈடுபட்டது என்றார். நம்மாழ்வார் திருவாய்மொழியில் (2–7–10) – மருடியேலும் விடேல் கண்டாய் – மனமே, எம்பெருமானை எப்போதும் விடக்கூடாது – என்று கூறுவது போன்றதாகும். இங்கு பெரியபெருமாளுக்குத் திருவேங்கடமுடையானின் தன்மைகளும் உண்டு என்றார்.

திருப்பாணாழ்வார் திருவடிகளே சரணம்

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்

.. .. தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:
ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

# ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகன் திருநக்ஷத்ர சிறப்புப் பகுதி

ஸ்ரீ வேதாந்த தேசிகரின் திருநக்ஷத்ரமான புரட்டாசி திருவோணம் நேற்று (23.09.2007) அமைந்தது. அதற்கான சிறப்புப் பகுதியாக பெரியதிருமுடியடைவு என்ற நூலில் இருந்து வேதாந்தாசார்யர் பற்றிய பகுதிகள் இங்கு தரப்பட்டுள்ளன. இவை எளிதான தமிழிலேயே உள்ளதால் மேலும் விளக்கப்படவில்லை.

## கோயில் கந்தாடைநாயன் அருளிச்செய்த பெரியதிருமுடியடைவு

எங்களாழ்வான் ஸ்ரீபாதத்திலே நடாதூரம்மாள். நடாதூரம்மாள் ஸ்ரீபாதத்திலே ச்ருதப்ரகாசிகாபட்டர், கிடாம்பி அப்பிள்ளான். அப்பிள்ளான் ஸ்ரீபாதத்திலே தூப்பில்பிள்ளை என்னும் வேதாந்தாசார்யர். இவருக்குத் திருவவதார ஸ்தலம் பெருமாள் கோயில் (காஞ்சீபுரம்). திருநக்ஷத்ரம் புரட்டாசி மாஸம் திருவோணம். திருவவதாரம் கண்டாம்சம். திருத்தகப்பனார் அனந்தஸூரிகள். குடி தூப்பில். குலம் வடமாள். விச்வாமித்ர கோத்ரம். திருநாமங்கள் தூப்பில் பிள்ளை, வேங்கடாசார்யர், ஸத்கண்ட ஸூரதான், வேதாந்தாசார்யர். திருவாராதனம் திருவேங்கடமுடையான், திருப்பாணாழ்வார், ஹயக்ரீவோபாஸ்தி. ஆசார்யர் கிடாம்பி அப்புள்ளான். சிஷ்யர் குமாரரான நயினாராசார்யரும், ப்ரஹ்ம தந்த்ர ஸ்வதந்த்ர ஜீயரும். இருப்பிடம் கோயில். இவர் வடமார்க்கத்துக்கெல்லாம் ச்ரேஷ்டர். இவர் செய்தருளின க்ரந்தங்கள் ரஹஸ்யத்ரயஸாரம், அமலனாதிபிரான் வ்யாக்யானம், ஸாரஸாரம், ரஹஸ்ய சிகாமணி, ரஹஸ்ய ரத்னாவளீ ஹ்ருதயம், ஸம்ப்ரதாய பரிசுத்தி, ப்ரதான சதகம், அபயப்ரதானஸாரம், உபகார ஸங்க்ரஹம், விரோத பரிஹாரம், பரமபதஸோபானம், பரமதபங்கம், ப்ரபந்தஸாரம், ஆஹாரநியதி, தத்வத்ரயம், சததூஷணி, ஸர்வார்த்தஸித்தி, தத்வமுக்தாகலாபம், ஸ்தோத்ரபாஷ்யம், பாஞ்சராத்ரரக்ஷை, ந்யாஸத்ரயம், பகவத் த்யான ஸோபானம், அபீதிஸ்தவம், தசாவதார ஸ்தோத்ரம், மதுரஸ்தவம், கோதாஸ்துதி, ஸ்ரீஸ்துதி, யதிராஜ ஸப்ததி, த்ரவிடோபநிஷத் தாத்பர்யம், கருட பஞ்சாசத், ஸங்கல்ப ஸூர்யோதயம், ந்யாய பரிசுத்தி, ந்யாய ஸித்தாஞ்சனம், கீதாபாஷ்ய ஸாரம், சதுச்லோகி வ்யாக்யானம், அதிகரண ஸாராவளி, தத்வடீகை, அவித்யா கண்டனம், குத்ருஷ்டித்ரய நிராஸம், தாத்பர்ய சந்த்ரிகை, பாதுகா ஸஹஸ்ரம், மீமாம்ஸ பாதுகை, மீமாம்ஸா பாஷ்யம், யாதவாப்யுதயம், வேதார்த்த ஸங்க்ரஹ வ்யாக்யானம், ஹம்ஸ ஸந்தேசம், ஹயக்ரீவ ஸ்தோத்ரம், கோபால விம்சதி, கருட தண்டகம் முதலானவை. இவர் அநேக மாயாவாதி வித்வான்களை ஜயித்தார்.

### தனியன்

ஸ்ரீமாந் வேங்கட நாதார்ய: கவிதார்க்கிக கேஸரீ
வேதாந்தாசார்யவர்யோ மே ஸந்நிதத்தாம் ஸதா ஹ்ருதி